27/10/1951 M.V.M M BANGHLORE, ...


# போர்வாள்

வாள் 5 வீச்சு 8

27-10-51 சனிக்கிழமை

ஆசிரியர்கள்:

காஞ்சி. மணிமொழியார்

மா. இளஞ்செழியன் B.A.Hons

துணை ஆசிரியர்:

காஞ்சி. கல்யாணசுந்தரம்

விலை 2 அணா


# காங்கிரஸ் வாதி!

## அன்றும் இன்றும்!

★

### 1941-ல்

"என்னய்யா இது அக்கிரமம்! ஊரிலே உலகத்திலே இல்லாத அநீதி! ஒரு சர்க்கார் என்றால் எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்று அர்த்தமா? அதிகாரம் கையில் இருக்கிறது என்ற காரணத்தால் எதைச் செய்தாலும் ஜீரணமாகிவிடும் என்று எண்ணிவிடுவதா? ஒருவன் குற்றம் செய்திருக்கிறான் என்று தோன்றினால் கொண்டுபோய் நிறுத்து அவனை வழக்கு மன்றத்திலே—நீட்டு உன் குற்றச்சாட்டுகளை—காட்டு அவற்றிற்கான ஆதாரங்களை—அவனும் பேசட்டும் தனக்குச் சார்பான வாதங்களை—நீதிபதி இருக்கிறார் நியாயம் வழங்க—அவன் குற்றவாளிதான் என்று அவர் கருதினால் பேஷாகத் தண்டிக்கட்டும் அவனை—அடைக்கட்டும் சிறையில்—அதுதானே முறை—நியாயம்—ஒழுங்கு? அதை விட்டுவிட்டு விசாரணையில்லாமலே தலைவர்களைச் சிறையில் அடைப்பதென்றால் யாரய்யா பொறுக்க முடியும் அந்த அக்கிரமத்தை, யார் பொறுக்கமுடியும்? இல்லை—நாங்கள்தான் கேட்கிறோம்—விசாரணை இல்லாமல் தலைவர்களைச் சிறையிலே தள்ளுகிறார்களே ஆட்சியாளர்கள்; இவர்களுக்கென்ன மனிதப் பண்பே கிடையாதா—நீதி நியாயமும் தெரியாதா? சே! சே! என்ன இருந்தாலும் இந்த ஆட்சியாளர்களுக்குப் புத்தி இப்படிக் கெட்டுப் போகக்கூடாது."

### 1951-ல்

"என்னய்யா கண்டு விட்டார்கள் இவர்கள்? ஏன் இப்படிக் காட்டுக் கூச்சல் போடுகிறார்கள்? எதற்காக ஊரைக் கூட்டி வைத்துக் கொண்டு இப்படி உரத்த குரலில் ஓங்கார மொழி பேசிக்கொண்டு திரிகிறார்கள்! விசாரணையில்லாமல் காவலில் வைக்கக்கூடாதாம்! நீதிபதியின் தீர்ப்பைப் பெறாமல் யாரையும் சிறையில் அடைக்கக் கூடாதாம்! குற்றவாளியின் குற்றம் நிரூபிக்கப்பட்டாலொழிய அவனை 'உள்ளே' தள்ளக்கூடாதாம்! அப்படிச் செய்வது ஜனநாயகமே அல்லவாம்! அது மனிதத் தன்மைக்குக் கூடமாறானதாம்! என்னென்ன கதைகளை அளக்கிறார்களப்பா இவர்கள்! விசாரணையில்லாமல் சிலரைக் காவலில் வைப்பதாலே என்ன கேடு வந்துவிடப்போகிறது? நாட்டுக்கு—எந்தக் குடி முழுகிவிடப்போகிறது! என்னவோ நடக்காத அக்கிரமமெல்லாம் நடந்துவிட்டது போல அல்லவா கூச்சல் போடுகிறார்கள்! பைத்தியக்காரர்கள்! எங்களைக் கூடத்தான் பிரிட்டிஷ்காரன் அந்தக் காலத்தில் விசாரணையின்றிச் சிறைக்குள் வைத்திருந்தான் கொஞ்ச காலம்! அதனாலென்ன தேய்ந்தா போய் விட்டோம் நாங்கள்! அல்லது எங்கள் உருவந்தான் என்ன மாறியா போய்விட்டது! வீணுக் கூச்சல் போடுகிறார்கள் அவர்கள், வேறு வேலை இல்லாத காரணத்தால்! விசாரணையின்றிக் காவல் கூடாதாம்! ஏன் கூடாது? ஏனய்யா கூடாது?"

* * *

### 1941-ல்

"இப்படியும் ஒரு அக்கிரமம் இருக்குமா இந்த உலகத்தில்? பத்திரிகைகளுக்கு ஜாமீன் கேட்கிறார்களே இந்த இருபதாவது நூற்றாண்டில்? தகுமா? முறையா? நீதிதானா? அடுக்குமா இந்தப் போக்கு? விலங்கிடும் சிறுமதிச் செயல் அல்லவா இது? செய்யலாமா ஒரு சர்க்கார் இதுபோல? செய்யவிடலாமா நாம்? பத்திரிகைகளை வெளியிட ஒரு முன் அனுமதி—அந்த அனுமதி பெற ஒரு ஜாமீன் தொகை—அந்தத் தொகையைப் பறிமுதல் செய்வது எதையாவது எழுதினால் — என்னப்பா அக்கிரமம் இதெல்லாம்? இந்த ஜனநாயக சகாப்தத்திலேயா இவ்வளவு

சர்வாதிகார தர்பார் நடப்பது? இதை வீர இந்தியராகிய நாமா பார்த்துவிட்டுச் சும்மா இருப்பது? முடியாது! கூடாது! போரிட்டாக வேண்டும்! இந்தப் பொல்லாங்குகளை ஒழித்தாகவேண்டும்!''

1951-ல்

''பத்திரிகா சுதந்திரமாம் பத்திரிகா சுதந்தரம்! என்ன மகாப் பெரிய பத்திரிகா சுதந்தரத்தைக் கண்டுவிட்டார்கள் இவர்கள்! பத்திரிகா சுதந்தரம் என்றால் எதை வேண்டுமானாலும் எழுதிவிடலாம் என்று அர்த்தமா? சர்க்காரைத் தாக்குவது—அதிகாரிகளைத் திட்டுவது—அவன் லஞ்சம் வாங்கினான் இவன் கைக்கூலி தேடினான் என்று எழுதுவது—மந்திரிகளின் மதிப்பீனம் என்று கட்டுரைகள் தீட்டுவது—ஆளவந்தார்களின் ஊழல்களை அம்பலப்படுத்துவோம் என்று ஆர்ப்பரிப்பது — இவ்வளவையும் விட்டு வைத்துக் கொண்டா இருப்பது நாங்கள்? அப்படி இருந்தால் எங்களுக்குத்தான் என்ன மதிப்பு? ஒரு சர்க்கார் என்பதற்குத்தான் என்ன பொருள்? நாங்கள் நாடாள்கிறோம் என்பதைத்தான் யார் ஏற்றுக்கொள்வார்கள்? ஜாமீன் கேட்பது—பறிமுதல் செய்வது—தடைகள் இருப்பது—அவற்றை மீறினால் சிறைக்குள் தள்ளுவது என்றெல்லாம் சில கட்டுத் திட்டங்கள் இருந்தால்தான் பத்திரிகாசிரியனும் அடங்கி ஒடுங்கிப் பதவிசாக நடந்து கொள்வான்! அது கூட இல்லாவிட்டால் அப்புறம் நம்ம தலைமேலே ஏறி உட்கார்ந்து கொள்ளமாட்டார்களா அவர்கள்! பத்திரிகைகளுக்குத் தடை இருக்கத்தான் வேண்டும். இருந்தாலென்ன தவறு? ஆற்றுக்குக் கரை இல்லையா? வயலுக்கு வரப்பு இல்லையா? வீட்டுக்கு வாயிற்படி இல்லையா? அது போலத்தான் பத்திரிகைகளுக்குத் தடை! தப்பென்ன அதிலே! தடை போடுகிறோம் அறிவுக்கு என்றால் காரணமில்லாமலா போடுவோம்—இதைக் கூடத் தெரிந்துகொள்ள முடியவில்லையே இந்த ஜனங்களாலே! பத்திரிகைக்காரர்கள்கூட கூடிக்கொண்டு இவர்களும் கூச்சல் போடுகிறார்களே — போடலாமா?''

* * *

## 1941-ல்

''ராணுவம் கிணுவம், கப்பல் கிப்பல், அது இது, ஏதோ, அதிலே இரண்டு இருக்கவேண்டியதுதான். ஆனால் அதற்காக? வசூலாகிற வரித்தொகையிலே பாதிப் பணத்தை இப்படியா ராணுவத்திற்கென்று கொட்டியழுவது? வருகிற பணத்தையெல்லாம் இப்படிப் பட்டாளத்துக்காரர்கட்கே செலவழித்து விட்டால் கல்வி—சுகாதாரம்—ஆஸ்பத்திரி—ரோட்டு—தொழில் வளர்ச்சி—விவசாய அபிவிருத்தி இதற்கெல்லாம் பணத்திற்கு எங்கிருந்து போவது? சிப்பாய்க்கூட்டம் கோட்டும் சூட்டும் மாட்டிக் கொள்வதற்காக விவசாயிகள் கூட்டம் எலும்பும் தோலுமாக மாறிக் கொண்டே இருக்க வேண்டியதுதானா? இதற்கொரு முடிவு கிடையாதா? இராணுவச் செலவுக்கு ஒரு முற்றுப் புள்ளி வராதா? வரும்படி செய்யவேண்டாமா நாம்? செய்வது நம் கடமை அல்லவா?''

## 1951-ல்

''இராணுவச் செலவைக் குறை குறை என்று சொல்லிவிட்டால் எப்படிக் குறைப்பது? ஒரு நாட்டின் பாதுகாப்புக்கான பணி புரிவதுதானே மற்ற எல்லாப் பணிகளையும்விட முக்கியமான காரியம்? அப்படி இருக்கும்போது மற்றச் செலவுகளைவிட இராணுவச்செலவு கொஞ்சம் கூடுதலாகத்தானே இருக்கவேண்டும்? மொத்த வருவாயிலே கிட்டத்தட்டபாதி இராணுவச் செலவுக்கென்றே ஒதுக்கப்பட்டு வருவது உண்மைதான். தவறென்ன அதிலே? அப்படி ஒதுக்கப்படுவதால், பள்ளிக்கூடம்—மருத்துவச் சாலை—நீண்ட ரோட்டு—வளம் மிகுந்த வயல்—செழிப்பு நிறைந்த தொழிற்சாலை—அருமையான அணைக்கட்டு இவற்றை ஏற்படுத்த முடியவில்லை என்பதும் உண்மைதான். என்ன செய்யமுடியும் அதற்கு? நாடு என்று ஒரு இடம் இருந்தால்தானே அதிலே பள்ளிக்கூடம் ஆஸ்பத்திரி ரோட்டு எல்லாம் இருக்கமுடியும்? இராணுவம் பலமாக இருந்தால்தானே நாடு பத்திரமாக இருக்கும்? பலமற்ற இராணுவம் நம்மிடத்திலே இருந்தால், கோழிக்குஞ்சை வல்லூறு கொத்திக் கொண்டு போய்விடுவதைப் போல அல்லவா வேற்று நாட்டார் நம் சுதந்தரத்தைப் பறித்துக் கொண்டு போய்விடுவர்? இராணுவச்செலவு அதிகம் அதிகம் என்று பேசுபவர்கள் இதையெல்லாம் கவனிக்கவேண்டாமா? கவனிப்பது அவர்கள் கடமை அல்லவா? கவனிக்க மறுப்பது மன்னிக்க முடியாத மாபெரும்குற்றம் அல்லவா?''

## 1941-ல்

''நம்முடைய நாடு ஏழைகள் நாடு—தரித்திர நாராயணர்களின் பிரதேசம். இங்கே அன்னக்காவடிகளும் அன்றாடங்காய்ச்சிகளும்தான் அதிகம். எண்ணெய்காணாத் தலைகளும் உணவுகாணா வயிறுகளும்தான் இங்கே ஏராளம். குச்சிபோன்ற கைகளும் சுப்பல் போன்ற கால்களும்தான் இங்கே உண்டு. ஒட்டிய கன்னங்களையும் உலர்ந்துபோன உதடுகளையும்தான் நாம் இங்கேபார்க்கமுடியும்பஞ்சடைந்த கண்கள்—குறுகிப்போன மார்பு—வளைந்துகிடக்கும் முதுகு—வாழ்வை நெறிக்கும் வறுமை—இதற்குப் பெயர்தான் இந்தியா. இப்படிப்பட்ட நாட்டிலே, ஆட்சிப்பீடத்தில் இருப்பவர்கள்—அலுவல் துறைகளில் உள்ளவர்கள்—நீதிபதியாக அமர்பவர்கள்—நிர்வாகத் தலைவர்களாக உலவுபவர்கள்—யாராயிருந்தாலும் சரி அவர்களின் மாத ஊதியம், அதிகமாகப் போனால் ரூபாய் 500-க்குமேல் இருக்கக் கூடாது. அதிகாரிகள் வாங்குகிற ஒவ்வொரு ரூபாய் சம்பளமும் ஏழையைப் பிழிந்தெடுத்த ஒவ்வொரு இரத்தத்துளி என்றால் தவறாகாது. எனவேதான் கூறுகிறோம், ஏழை விவசாயிகள் இடுப்பொடிந்து கிடக்கும்போது உல்லாசச் சீமான்களாக வாழ அதிகாரிகள் விரும்பக்கூடாது. 500ரூபாய் சம்பளமே அதிகம், அதற்குமேல் கேட்பது. ஏழைக்குச் செய்யும் துரோகமும், நாட்டுக்கு இழைக்கும் அநீதியுமே ஆகும். உத்யோகஸ்தரின் அந்தஸ்து உயர்ந்த சம்பளம் பெறுவதில்தான் இருக்கிறது என்று எண்ணுவது முற்றிலும் தவறு. உண்மையான அந்தஸ்து உயர்தரமான ஒழுக்கத்திலேதான் குடிகொண்டிருக்கிறது. இதை உணரவேண்டும் அதிகாரிகளும் மந்திரிகளும் அலுவலாளரும் ஏழை

யோரும்! உணர்ந்து, எவ்வளவு குறைவாக ஊதியம் பெறமுடியுமோ அவ்வளவு குறைவாகப் பெற வேண்டும்."

## 1951-ல்

"அரை வயிற்றுக் கஞ்சிக்கும் ஆலாய்ப் பறக்கிறார்கள் ஏழைகள். உண்மைதான். ஆனால் அதற்காக அமைச்சர்களின் ஊதியத்தைக் குறைத்துவிட்டால் அவர்களின் பணி எப்படி ஒழுங்காக நடைபெறும்? பசிதீர உணவு பெறவும் வழியின்றிப் பாட்டாளிகள் பதைபதைக்கிறார்கள். தெரிகிறது எங்களுக்கு! தெரிந்தால் மட்டும்? அதற்காக நீதிபதிகளின் சம்பளத்தை மிகவும் குறைவாக வைத்துவிட்டால் நீதிபதிகளுக்கு மதிப்பு எப்படி இருக்கும்? அந்தஸ்து எப்படி நிலைநாட்டப்படும்? கௌரவம் எப்படி காப்பாற்றப்படும்? அமைச்சர்கள்—கலெக்டர்கள்—நீதிபதிகள்—ஆபீசர்கள் இவர்களுக்கெல்லாம் சம்பளம் ஏராளமாக இருந்தால்தான் இவர்களுக்கெல்லாம் சமுதாயத்திலே ஒரு கௌரவம், ஒரு அந்தஸ்து, ஒரு பெருமை இருக்க முடியும். இல்லாவிட்டால் யார் இவர்களை மதிப்பார்கள்—யார் இவர்கட்குப் பணிந்து நடப்பார்கள்? அமைச்சர்களுக்கா? மாத ஊதியமா? சென்னை அமைச்சரானால் ரூ. 1500 இருக்கட்டும் டில்லி அமைச்சரானால் ரூ. 2000. இருக்கட்டும். நீதிபதிகளுக்கா? சாதாரண நீதிபதியானால் ரூ. 3000. தலைமை நீதிபதியானால் ரூ. 5000. ஜனாதிபதிக்கா? நாட்டுக்கு ஒரு நல்ல தலைவர் அவர்—எனவே அவருக்கு மாத ஊதியம் இருக்கட்டும் ரூபா 10000. கலெக்டரா—இருக்கட்டும் ரூபா 2000 நாடுதான் ஏழை நாடென்றால் நாட்டின் நிர்வாகிகள்கூடவா ஏழைகளாகக் காட்சி தரவேண்டும்? வேற்று நாட்டார் நம்மை மதிக்க வேண்டாமா? நான்கு நாட்டார் நடுவிலே நம் மந்திரிகள் கௌரவமாக உட்கார வேண்டாமா? ஆம் என்றால் சம்பளம் அவர்கட்கு ஆயிரக்கணக்கில் இருப்பதுதானே முறை? எல்லோருமே எப்படி மகாத்மா காந்திகளாக இருந்துவிட முடியும்—எல்லோருமே எப்படி எளியவாழ்வு வாழ்ந்துவிடமுடியும்? ஐயையோ இவ்வளவு சம்பளமா அமைச்சர்களுக்கு என்று அலறுபவர்கட்கு ஏன் இந்த உண்மைகளெல்லாம் தெரியவில்லை? அல்லது தெரிந்தும் தெரியாததுபோல நடிக்கிறார்களா?"

* * *

## 1941-ல்

"போலீஸ்காரர்கள் என்றால் பொதுமக்களின் தொண்டர்கள்—தோழர்கள்—பாதுகாவலர்கள் என்றுபொருள். ஆனால் இந்தஆட்சியிலோ, அவர்கள், பொதுமக்களைக் கசக்கிப் பிழியும் கொடுங்கோலர்களாக இருக்கிறார்கள். ஒவ்வொரு போலீஸ்காரனும் ஒவ்வொரு குட்டி ஹிட்லராக அல்லவா இருக்கிறான்! ஒவ்வொரு இன்ஸ்பெக்டரும் ஒவ்வொரு வெலிங்டனாக அல்லவா அதிகார தர்பார் செலுத்துகிறான்! சர்க்காரிடத்திலே ஊழியர்களாக இருக்கிறார்கள்—எனவே வாங்குகிற சம்பளத்துக்கு வஞ்சனையில்லாமல் ஏதோ சர்க்கார் இட்ட வேலையைச் சரிவரச் செய்யவேண்டியதுதான். ஆனால் அதற்காக போலீஸ்காரனாக ஆனவுடனே இருதயத்தைக் கழற்றித் தூர எறிந்துவிட வேண்டுமென்று அர்த்தம்? ஈவு இரக்கம்—பச்சாதாபம்—பழிபாவம் ஒன்றுமே கிடையாதா இந்தப் போலீஸ்காரர்களுக்கு? இப்படியா பொதுமக்களின் ஊழியர்களை இரத்தம் ஒழுக ஒழுக அடிப்பது? பொதுநலசேவகர்களை இப்படியா தடியால் அடித்து எலும்பை நொறுக்குவது? ஊர்வலமாகச் செல்லும் மக்கள் மீது இப்படியா குதிரைகளை ஏவி மக்களை மிதித்துத் துவைத்து நாசகர்த்தனமாடுவது? இவர்கள் மனிதர்கள்தானா அல்லது மனிதஉருவில் நடமாடும் இரக்கமற்ற வேங்கைகளா? ஜீவகாருண்யம்—மனிதாபிமானம்—பந்தம் பாசம்—சொந்த நாட்டுக்காரன் என்ற பற்று எதுவுமேவா இல்லாமற் போய்விட்டது இந்தத் தேசத் துரோகக் கும்பலுக்கு? ஏதோ இரண்டு காசு கொடுக்கிறது சர்க்கார் இவர்களுக்கு—உண்மைதான். ஆனால் அந்த அற்பக் காசுக்காகவா தங்கள் இருதயத்தையே வெட்டி எடுத்து வெளியே எறிந்து விடுவது? இந்த சர்க்கார்தானாகட்டும், போலீஸ்காரர்களைக்கொண்டு பொதுமக்களை இப்படி நாயைப் புடைக்கிறார்களே, இவர்களை ஒரு நாகரிக சர்க்கார் என்று எப்படி நாம் சொல்ல முடியும்—நாசகால சர்க்கார் என்று வேண்டுமானால் சொல்லலாம்—அதுதான் உண்மையில் பொருத்தமாகவும் இருக்கும்! ஒழிக போலீஸ் ராஜ்யம்! [illegible] மகாத்மாக—கி ஜே! வந்தேமாதரம்!

## 1951-ல்

"சென்னையிலோ குன்றத்தூரிலோ போலீசார் தடியால் அடித்துவிட்டார்கள் என்பதற்காக ஏன் இந்தப் பொதுமக்கள் இவ்வளவு ஆர்ப்பாட்டம் புரியவேண்டும்? போலீஸ்காரர்கள் பச்சாதாபம் அற்றவர்கள், ஈவு இரக்கம் இல்லாதவர்கள், மனிதாபிமானத்தை மறந்தவர்கள் என்றெல்லாம் எதற்காக, ஏனோ, வறட்டுக் கூச்சல் போடவேண்டும்? போலீஸ்காரர்கள் தங்கள் கடமையைச் செய்திருக்கிறார்கள்—குற்றமென்ன அதிலே? சட்டத்தையும் அமைதியையும் நிலை நாட்டத்தானே போலீஸ்காரர்கள் இருக்கிறார்கள்—அதைத்தான் செய்திருக்கிறார்கள் அவர்கள் குன்றத்தூரிலும்சென்னையிலும்! தவறேது அதிலே? சட்டத்தை மீறுகிறார்கள் பொதுமக்கள் என்றால் அவர்கள் நிச்சயம் தடியால்தான் அடிக்கப்படுவார்கள். வேறு என்ன முத்தமா கொடுக்கப்படுவார்கள். என்ன எண்ணிக்கொண்டு இந்த மக்கள் போலீஸ் ஒழிக என்று கூச்சல் போடுகிறார்களோ தெரியவில்லை. தடியால் அடிபட்டால் வலி எடுக்கத்தான் செய்யும். இரத்தம் பீறிட்டெழுந்து பாயத்தான் செய்யும். அதற்காக? போலீஸ் ஒழிக என்று கூச்சல் போட்டுவிடுவதா? வாழ்க போலீஸ்! வளர்க அதன் சக்தி! பண்டிட் நேரு—கி ஜே! ஜேய் ஹிந்த்!"

* * *

## 1941-ல்

"இல்லங்களின் இன்பத்தைச் சிதைப்பது குதிரைப் பந்தயம். மக்களின் வாழ்க்கையை வதைப்பது குதிரைப் பந்தயம். குடும்பங்களின் அமைதியை ஒழிப்பது குதிரைப் பந்தயம். நாட்டை நாசமாக்குவது குதிரைப் பந்தயம். ஆட்சியாளர்கட்கு இதிலிருந்து கிடைக்கும்

(7-ம் பக்கம் பார்க்க)




பதினொன்காம் பகுதி

## வெற்றி வீரன்

பரிவின்பனும் உதயனும் தங்கள் குதிரைகளை விரட்டிக்கொண்டிருந்தார்கள். மாலைப்பொழுது மறைந்து கொண்டிருந்தது. இனிய செக்கர் வானம் அவர்கள் கண்களைக் கவர்ந்தது. அந்த ரம்மியமான காட்சியையும், அந்த ஒற்றையடிப் பாதையின் இரு மருங்கிலும் இருந்த செடிப் புதர்களின் பசுமையான தோற்றத்தையும், அவைகளில் சிலவற்றில் பூத்துக் குலுங்கிக்கொண்டிருந்த காட்டுப் புஷ்பங்களின் அழகையும் மணத்தையும் பார்த்து, முகர்ந்து இரசித்துக் கொண்டே சென்றார்கள். மந்தகாசமான அந்த மாலைப்பொழுது மறைந்து விட்டது. இல்லை, மறைக்கப்பட்டது இருளரக்கனால்! இனிமையும் அழகும் நிறைந்திருந்த காட்சி மறைந்து, பயங்கரமான இருட்டு கவ்விக் கொண்டது. இரவு தங்கிச் செல்ல அவர்கள் கண்களுக்கு வீடுகள் ஏதும் தென்படவில்லை. அவர்கள் காட்டுப் பாதையைத் தாண்டி கட்டாந்தரையான வழி யொன்றிலே சென்று கொண்டிருந்தார்கள். 'சுரம்'' என்று சொல்லப்படும் அந்த வழி மிகவும் பயங்கரமான வழி. இரவு நேரங்களில் அவ்வழியே செல்ல எவரும் அஞ்சுவர். துஷ்டமிருகங்களின் அட்டகாசமோ பேய்பிசாசுகளைப்பற்றிய பயமோ அதற்குக் காரணமல்ல. அந்தப் பகுதியில் வாழ்ந்த மக்கள் ஒரு தீய கலையை மேற்கொண்டிருந்தார்கள். உழுதுண்டுவாழ இயலாத அந்த மணற்பாங்கான நிலப் பகுதியில் வாழ்ந்து வந்த மக்கள் பிறர் பொருட்களை நம்பித் தங்கள் வாழ்க்கையை நடத்த வேண்டியிருந்தது. சூழ்நிலை அவர்களை வழிப்பறிக் கொள்ளைக்காரர்களாக்கியிருந்தது! இது பரிவின்பனுக்கும் உதயனுக்கும் தெரியாத ஒன்றல்ல.

''இந்த இரவு நேரத்திலே நாம் இந்த வழியே செல்வது ஆபத்து!'' என்றான் உதயன்.

''ஆமாம், அது எனக்குத் தெரியும். ஆனால் நாம் பயப்படவேண்டிய அவசியமில்லை. தைரியத்துடன் இரு உதயா!'' என்றான் பரிவின்பன்.

இருவரும் தங்கள் குதிரைகளை விரட்டிக் கொண்டிருந்தார்கள். இருளைக் கிழித்துக்கொண்டு அவை பறந்தன. வானிலே அப்பொழுது தான் வெண்ணிலா தன் ஒளியைப் பாய்ச்ச ஆரம்பித்துக் கொண்டிருந்தது. அந்த மங்கலான ஒளி அவர்கள் பயத்தை ஒருவாறு தணித்தது.

வெகுதூரம் சென்றுவிட்டார்கள். ஆனால் இன்னும் அந்தப்பகுதியைத் தாண்டவில்லை. சிறிது தூரம் தான் இருந்தது அந்தப் பகுதியின் எல்லையை எட்டிப்பிடிக்க. வெகு தூரத்திலே ஒரு வீட்டில் விளக்கு எரிவது அவர்கள் கண்களுக்குத் தெரிந்தது அவர்கள் உள்ளத்திலே அமைதி நிலவியது. சென்று கொண்டேயிருந்தார்கள்.

பரிவின்பன் பின்புறம் திரும்பிப் பார்த்தான். சிறு இரைச்சல் ஏதோ கேட்டதைப்போலிருந்தது. அதைத் தொடர்ந்து ஒரு கும்பல் தீவட்டிகளுடன் சில ஈசைகை காட்டும் ஒலிகளை யெழுப்பிக் கொண்டு அவர்களைத் துரத்திக் கொண்டு வந்தது! பரிவின்பனும் உதயனும் மிகவும் பயந்து விட்டார்கள். தங்கள் குதிரைகளின் நடையை வெகுவாக நாடினார்கள். அவைகளும் தங்கள் எசமானர்களை எவ்வளவு வேகத்துடன் கொண்டு செல்ல முடியுமோ அவ்வளவு வேகத்துடன் சென்று சென்றபடியே இருந்தன.

எதிர்பாராத விதமாக, அவர்கள் முன்பும் ஒரு கும்பல் தோன்றி அவர்களை வழிமறித்தது. குதிரைகள் மிரண்டுவிட்டன. தங்கள் முன்னங்கால்களை உயர்த்திக் கனைத்தன. பரிவின்பனுக்கும் உதயனுக்கும் யாது செய்வதென்று தோன்றவில்லை, முன்னும் பின்னும் மூர்க்கர்கள் தீவட்டிகளுடனும் பட்டாக்கத்திகளுடனும் நிற்கும் போது அவர்கள் தப்பியோட வழியேது? சரணடைவதைத் தவிர வேறுவழி கிடையாது! சிக்கச் சிக்கமான அந்த நிலையிலிருந்த அவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். இருவர் முகத்திலும் அச்சக் குறிகளும் கேள்விக் குறிகளும் அழுத்தந்திருத்தமாகப் படிந்திருந்தன. வியர்த்துக் கொட்டியது அவர்களுக்கு. யாது செய்வதென்று தோன்றாமல் ஏதும் பேசாமல் மௌனமாக நின்று கொண்டிருந்தார்கள், தங்கள் குதிரைகளை விட்டுக் கீழே இறங்கினார்கள்.

''குகைக்கு இழுத்து வாருங்கள் இந்தக் கசடர்களை!'' என்று பயங்கரக் குரலில் கூறிவிட்டுத் தன் வெள்ளைக் குதிரையின் மீது ஏறிக் கொண்டு விரைவாகக் குகைக்குச் சென்றுவிட்டான், அந்தக் கூட்டத்திலிருந்த ஒரு பயங்கர மனிதன்.

விநோதமான முறையிலே முடித்துக் கட்டப்பட்ட தலைமயிர்! நெருப்புருண்டைகளாகக் காட்சி அளித்த கண்கள்! கருத்த மேனி! பருத்த உடல்! இடையிலே ஒரு நீண்ட வாள்!......

இவைகளனைத்தும் அவனை ஒரு பயங்கரமனிதனாகக் காட்டின. கருப்புடை அணிந்திருந்தான் அவன். அந்தக் கூட்டத்திலிருந்தவர்களனைவரும் கருப்பு உடை தரித்து நீண்டவாட்களுடன் காட்சி தந்தார்கள்.

அக் கொள்ளைக் கூட்டத்தினர் அவர்கள் மீது பாய்ந்து அவர்களைப் பிடித்துக் கொண்டனர். அவர்கள் குதிரைகளையும், மூட்டை முடிச்சு

களையும் அவர்களுள் சிலர் பறித்துக் கொண்டார்கள்.

"ம்! நடங்கள்!" என்றான் ஒருவன்.

பரிவின்பனும் உதயனும் ஏதும் பேசாமல் அவர்கள் பின்னே நடந்தார்கள். பரிவின்பனின் முகத்திலே பயம் அதிகமாகப் பிரதிபலிக்கவில்லை. உதயனின் முகத்திலே அது அதிகமாகப் பிரதிபலித்தது. பரிவின்பனின் முகத்திலும், நடையிலும் வீரம் தோன்றியது. தன்னை அக்கொள்ளைக் கூட்டத்தினர் பிடித்துச் செல்வதால் சிறிதும் பயமடையாதவனைப் போல அவன் தோற்றம் இருந்தது.

சற்று தூரத்திலே இருந்ததோர் குகைக்கு அவர்கள் இழுத்துச் செல்லப்பட்டார்கள். அந்த இருட்டு நேரத்திலே ஒளியையும் அனலையும் தந்து கொண்டிருந்த தீவட்டிகள் அந்தக் குகையின் தோற்றத்தை நன்றாக எடுத்துக் காட்டின. சிறு குன்றொன்றில் அந்தக் குகை அமைந்திருந்தது. அதன் வாயில் மிகவும் சிறிதாக இருந்தது. அதன் வழியாக அந்தக் கொள்ளைக்காரர்கள் அவர்களை உள்ளே இழுத்துச் சென்றார்கள்.

குகையின் உட்புறம் ஒளிமயமாகவிருந்தது. அழகிய சித்திர வேலைப்பாடுகள் செய்யப்பட்டதோர் ஆசனம் சற்று உயரமான பீடத்திலே இருந்தது. நாட்டுமன்னர்களின் சிம்மாதனம் போல இருந்தது அது. அதன் மீது போர்த்தப்பட்டிருந்த மெல்லிய பட்டுத்துணி அந்த வெளிச்சத்தில் தன் நுட்பத்தைக் காட்டியது! அந்த ஆசனம் காலியாகவிருந்தது. அதைக்கண்ட பரிவின்பனும் உதயனும் அது அந்தக் கொள்ளைக்கூட்டத் தலைவனின் இருக்கை என்பதையும் அவன் அங்கு இல்லையென்பதையும் அறிந்துகொண்டார்கள்.

அந்த ஆசனத்தின் எதிரே பளபளவென்று மின்னிக் கொண்டிருந்ததோர் இரத்தினக் கம்பளத்தின் மீது பற்பலபொருட்கள் குவிக்கப்பட்டிருந்தன. பலப்பலப்படைக் கலப் பாசுரங்கள்! பொன்னாபர [illegible] ணங்கள்! வைரத்தோடுகள்! முத்துமாலைகள்! கெம்புக் கற்கள், பதிக்கப்பெற்ற கணையாழிகள்! பவழ, மாணிக்கமாலைகள்! மெல்லியபட்டாடைகள்! யானைத்தந்தங்களாலாகிய அழகிய நுட்பமான பொருட்கள்!...

இவைகளனைத்தும் அந்த அழகிய இரத்தினக் கம்பளத்தின்மீது கொட்டிக் குவிக்கப்பட்டிருந்தன.

தன்னுடைய தந்தையைப் பிரிந்து—துட்டர்களால் தன் தந்தையிடமிருந்து பிரிக்கப்பட்டுச் சிறையில் வைக்கப்பட்டவன் வாடிவதங்குவான்! அவன் முகத்திலும், பேச்சிலும், செயலிலும் மகிழ்ச்சி இருக்காது! தன் எசமானனிடமிருந்து தன்னைச் சில அயோக்கியர்கள் பிடித்துவந்து வதைத்தால் ஒருநாய் மிகவும் மிரண்டுவிடும்! குலைக்கும்! அதற்கு இருப்புக்கொள்ளாது! ஆனால் பொன்னாபரணங்களும், பட்டாடைகளும் அப்படியல்ல என்பது அங்கு வெளிப்படையாகத் தோன்றியது! தங்களைத் தங்கள் உடமைகளாக்கிக் கொள்பவர்களைப்பற்றிய கவலை சிறிதும் இல்லாமல், தங்கள் அழகையும், பளபளப்பு, மினுமினுப்பு ஆகியவைகளையும் எப்போதும்போல முழு அளவிலே அவை காட்டிக்கொண்டிருந்தன. பரிவின்பனும் உதயனும் அவைகளைப் பார்த்தபடியே நின்றுகொண்டிருந்தார்கள். அக்கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்த இருவர் அவர்கள் கைகளைப் பிடித்துக்கொண்டிருந்தார்கள்.

அவர்களைக் குகைக்கு இழுத்து வருமாறு கூறிவந்த அந்தப் பயங்கர மனிதன் அங்குவந்தான். ஆசனம் வைக்கப்பட்டிருந்த மேடைமீது ஏறினான். அக்கூட்டத்தினர் அனைவரும் அவனை வணங்கி அமைதியாக நின்றார்கள். பரிவின்பனும் உதயனும் வீரத்துடனும் வீராப்புடனும் நின்றுகொண்டிருந்தார்கள்.

"டேய்! காளிங்கரை வணங்குங்களடா! அவர் யார் தெரியுமா? அவர் எங்கள் துணைத்தலைவர்!" என்றான் ஒருவன்.

பரிவின்பனும் உதயனும் ஒரு அசட்டுச் சிரிப்புடன் நின்றுகொண்டிருந்தார்கள். அந்த மனிதன் சொன்னதைத் தாங்கள் சட்டைசெய்யவில்லையென்பதை அக்கூட்டத்திற்குக் காட்டினார்கள். மீண்டும் அவன் அவர்களைத் தன் [illegible] னுடைய துணைத்தலைவனை வணங்கச் சொன்னான்.

"வழிப்போக்கர்கள் கொள்ளையடிக்கும் கூட்டத்தின் உபதலைவனை வணங்குவதா? பலரின் உடமைகளைப் பறிப்பவனைப் பணிவதா? பயமுறுத்தலையும் பெரிய கூட்டத்தையும் கண்டு வீரத்தை விட்டுக் கொடுப்பதா? மானத்தை முடக்கிவைப்பதா? சீ!...அதுமட்டும் நடக்காது!"

பரிவின்பன் உணர்ச்சியோடு உக்கிரமமாக இந்த வார்த்தைகளை வீசியெறிந்தான். அக்கொள்ளைக் கூட்டத்தின் துணைத்தலைவனான காளிங்கனின் கண்களிலே கோபக் கனல் கொழுந்துவிட்டெரிந்தது. அங்கு நின்றுகொண்டிருந்த கொள்ளைக்காரர்களனைவரும் பரிவின்பனை அப்படியே மென்றுவிழுங்கிவிடுபவர்களைப் போலப் பார்த்தார்கள். சிலர் பற்களை நறநறவென்று கடித்துக்கொண்டார்கள். சிலர் பரிவின்பனை நெருங்கி அவனைத் தாக்க முயன்றார்கள். சிலர் தங்கள் இடையிலே செருகியிருந்த வாட்களை உருவினார்கள்.

"முடிதரித்த மன்னர்களும், அஞ்சாத நெஞ்சம் கொண்ட படைவீரர்களும், பெருஞ் செல்வம் படைத்த வணிகப் பெருமக்களும் எங்களை வணங்கும்போது அற்பப் பதராகத்தோன்றும் நீ..."—காளிங்கன் தன் பேச்சை முடிக்கக்கூட இல்லை. அதற்குள்ளாக,

"இருக்கலாம். மன்னர்கள் சிலரும் வீரர்கள் சிலரும் உங்கள் காலடியில் விழுந்து மண்டியிட்டிருக்கலாம். ஆனால் அந்தக் காரியத்தை நீர் இந்த நெய்தல் நாட்டுச் சிங்கங்களிடம் எதிர்பார்க்க முடியாது!" என்று ஆவேசத்துடன் சொன்னான் பரிவின்பன்.

"நெய்தல் நாட்டுச் சிங்கங்களா?...சிங்கங்கள்! இருக்கலாம். ஆனால் எங்கள் முன்பு நீங்கள் சிறு புழுக்கள்! ஞாபகமிருக்கட்டும்! பேசுவது யாரிடம் என்பதை நன்கு உணர்ந்துபேசு!"—காளிங்கன் கூச்சலிட்டுப் பேசினான்.

"புழுக்கள்! ஆமாம். புழுக்கள் தான். நூற்றுக் கணக்கான உங்களனைவரின் பலத்தின் முன்பு எங்கள் இருவரின் வன்மையும் புழுக்களின் வன்மைக்குத்தான் சமம்! நாங்கள் புழுக்களா, புலிகளா என்பதைத் தெரிந்துகொள்ள உங்களில் [illegible] ஒருவர் இருவராக எங்களிடம் முறையாகச் சண்டைசெய்து பாருங்கள்! அப்பொழுது தெரிந்துவிடும் உங்கள் பலமும் வீரமும்!" என்றான் பரிவின்பன் அசட்டுச் சிரிப்புடன்.

அந்தக் கும்பலிலே ஒரு சலசலப்புச் சத்தம் உண்டாகியது! ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டார்கள். "காளிங்கரே! எனக்கு அனுமதி கொடுங்கள்!" என்ற வேண்டுதல் விருத்தங்கள் கிளம்பின.

"அமைதி!" காளிங்கனின் இந்தச் சத்தம் அங்கு எழும்பிக்கொண்டிருந்த இரைச்சலை நிறுத்தி அமைதியை நிலவச் செய்தது!

"ஓ ஹோ! அப்படியா?...சரி இப்பொழுது எமது வீரர்களுள் ஒருவனுடன் நீ மல் யுத்தம் செய்ய பார்ப்போம்!...ம்...விதுரா! முன்னே வா! இந்தப் புழுவை நசுக்கிப் போசுக்கு!" என்று தொடர்ந்து கொக்கரித்தான் காளிங்கன்.

பரிவின்பன் இலேசாகச் சிரித்துக்கொண்டான். சண்டையிடத் தயாரானான். உதயனை ஒதுங்கி நிற்குமாறு செய்ய அக் கொள்ளைக் கூட்டத்தினர் சற்று தூரம் இழுத்துச் சென்றனர். பரிவின்பனைத் தங்கள் கூட்டத்தின் பிரதிநிதியாக அவனுடன் போரிடவந்த விதுரனிடம் போர் செய்ய, தங்கள் பிடிப்பிலிருந்து விட்டார்கள் அவனைப் பிடித்துக் கொண்டிருந்த கொள்ளைக்காரர்கள்.

மல் யுத்தம் தொடங்கியது! கொள்ளைக் கூட்டத்தார்கள் ஆரவாரம் செய்து தங்கள் பிரதிநிதியை ஊக்குவித்தார்கள். பரிவின்பன் ஆவேசத்துடனும் வீரத்துடனும் போர் செய்தான். ஒரு புது பலம் அவனிடம் அப்பொழுது குடிகொண்டுவிட்டது. இருவரும் உருண்டு புரண்டார்கள்; விழுந்து எழுந்தார்கள். இருவருக்கும் காயங்கள்! இருவர் உடலிலும் குருதி கசிந்தது! பரிவின்பன் பின்வாங்கிக்கொண்டிருந்தான். அந்தக் குறையதிர கூச்சல் எழுப்பித் தங்கள் தோழனை ஊக்குவித்தார்கள் அக் கொள்ளைக்காரர்கள். காளிங்கன் மகிழ்ச்சி மிகுதியால் உரத்த சத்தமிட்டுச் சிரித்தான்! சண்டை நடந்துகொண்டேயிருந்தது.

திடீரென்று அங்கு அமைதி நிலவியது. கொள்ளைக் கூட்டத்தினர் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள். காளிங்கனின் முகமும் சுருங்கிவிட்டது. பரிவின்பனோடு போர் செய்த கொள்ளைக் கூட்டத்தினன் அடிமரமில்லாத நெடும்பனையைப் போல தரையில் விழுந்து கிடந்தான். பரிவின்பன் வெற்றிப் புன்னகையைத் தன் அதரங்களுக்கிடையே வழியவிட்டு, கம்பீரமாக நின்றுகொண்டிருந்தான்.

"விதுரன் மிகுந்த களைப்படைந்திருந்தான். அதனால்தான் விழுந்துவிட்டான்! இப்பொழுது என்னுடன் போர் செய் பார்ப்போம்!" என்று கூறிச் சிரித்துக்கொண்டே காளிங்கன் பரிவின்பனை நெருங்கினான்.

இரு பெரும் கப்பல்கள் ஒன்றோடொன்று முட்டி மோதிக்கொள்வதைப் போல அவர்களிருவரும் முட்டிமோதிக் கொண்டார்கள். இருவரும் ஒருவரையொருவர் தூக்கியெறிந்து கொண்டார்கள். பரிவின்பன் மிகுந்த களைப்படைந்திருந்தான். எனவே சற்று நேரம் பின் வாங்கினான். அவன் உடலில் பலத்த காயங்கள் உண்டாயின! விடாது போர் செய்தான். களைப்பு காளிங்கனை அணைத்துக் கொண்டது. அவன் பின்வாங்க ஆரம்பித்தான். பரிவின்பன் அவனை ஒரு பந்தைப்போல தூக்கியெறிந்து விளையாடினான். அவ்வளவு நேரமாகத் தங்களின் துணைத்தலைவனை ஊக்குவிக்கும் வகையில் வாழ்த்தொலிகளை எழுப்பிக் கொண்டிருந்த கொள்ளைக்காரர்கள் மௌனம் சாதித்தார்கள். ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். முனகிக் கொண்டார்கள். பொறுமையும் வேதனையும் அவர்கள் கண்களிலே தோன்றின. பரிவின்பன் மீது பாய்ந்து அவனைத் தங்கள் வாட்களால் வெட்டி வீழ்த்த வேண்டும் போலிருந்தது அவர்களுக்கு. அந்த அளவுக்கு பரிவின்பன் காளிங்கனைப் பின்வாங்கச் செய்தான். இறுதியில் காளிங்கனும் மரக்கட்டையைப் போல் உணர்ச்சியற்று கீழே விழுந்து விட்டான். பரிவின்பன் நாசுக்காக நின்றபடியே வெற்றிச் சிரிப்பு தன் அதரங்களிலே தவழ உதயனைப் பார்த்தான். உதயன் மகிழ்ச்சியோடு சிரித்தான்.

"இவனைச் சிறையிலடைத்து வைப்போம்!"

"ஆமாம். நமது தலைவர் வரும் வரை அவனைச் சிறையில் தான் வைக்க வேண்டும்! அவரோடு போர் செய்துவிடுவானா இவன்?"—இப்படிப் பேசிக்கொண்டார்கள் அக் கொள்ளைக் கூட்டத்தினர். தரையில் விழுந்துகிடந்த காளிங்கனுக்குத் தண்ணீர் கொடுத்து அவனைச் சுய உணர்வு அடையச் செய்துகொண்டிருந்தார்கள் சிலர்.

காளிங்கன் சுய உணர்வு பெற்றதும், "சிறையில் அடைத்து வையுங்கள் இந்தக் கசடர்களை! நமது தலைவர் இவர்களைக் கண்டு இவர்களை வீழ்த்தித் தள்ள வேண்டும்!" என்று கூச்சலிட்டான்.

(தொடரும்)

---

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

போற்றப்படுவதுமாகிய மனுதர்ம ஏடு!

அந்த மனுதர்மப் பாதையிலே தான் மனம் துணிந்து நடக்கின்றன இந்த நாட்டுத் தேசிய ஏடுகள்.

லியாகத் அலிகான், இஸ்லாமியர்! எனவே அவருக்கு ஒரு குறிப்பிட்ட நீதியை வழங்கியிருக்கின்றன.

ஜவகர்லால் நேரு, "பூதேவா பரம்பரை!"—எனவே அவருக்கு வேறோர் நீதியை வழங்கியிருக்கின்றன.

நீதி, ஜாதிக்கேற்றபடி வளைந்து கொடுக்க வேண்டுமென்பது ஆரிய சித்தாந்தம்.

இந்த நாட்டுத் தேசிய ஏடுகளில் நூற்றுக்குத் தொண்ணூறுக்கு மேற்பட்டவை ஆரியகுலத்தவரால் நடத்தப்படும் வஞ்சகக் கூடுகள் தானே!

எனவேதான் அந்த ஏடுகள் லியாகத்துக்கு ஒரு நீதியையும் நேருவுக்கு வேறோர் நீதியையும் வழங்கியிருக்கின்றன.

குலத்துக்கொரு நீதி வழங்கும் மனுதர்ம சாஸ்திரம், ஆரிய கலாசாரத்திற்குள்ள ஓர் அழியாத களங்கம்.

ஜாதிக்கொரு நீதி தரும் நம் தேசிய ஏடுகள், இந்தியத் துணைக் கண்டத்திற்கு ஏற்பட்டுள்ள பல அவமானச் சின்னங்கள்.

இந்தச் சின்னங்கள் தொலைந்தாகவேண்டும்—இந்தியா உருப்படவேண்டுமானால்—இங்கே ஜனநாயக ஒளி பரவவேண்டுமானால்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பணம் பணம் அல்ல, அது பாவ மூட்டை — எத்தனையோ மனைவி மார்கள் சிந்தும் கண்ணீர்த் துளி களின் தொகுப்பு. நாடு நாசமாகா திருக்க வேண்டுமானால், குடும்பங் கள் சுக்குநூறாகச் சிதையாதிருக்க வேண்டுமானால், சமுதாயத்தில் வேதனை வெள்ளம் கரைபுரண்டு ஓடாதிருக்க வேண்டுமானால், மக் கள் வாழ்க்கை சிதைந்து சின்னா பின்னமாகாதிருக்க வேண்டுமா னால் குதிரைப் பந்தயம் உடனே ஒழிக்கப்பட்டாக வேண்டும்.''

## 1951-ல்

''குதிரைப் பந்தயத்தை ஒழிப் பதா? இப்போதா? பண நெருக்கடி மிகுந்துள்ள இந்த வேளையிலா? வேண்டாம்! கொஞ்சம் பொறுப் போம்! பிறகு பார்ப்போம்! இதற் கென்ன அவசரம் இப்போது! இப் போது இந்தக் காரியத்தைப் புரி வதுதானா நம்முடைய வேலை! கொஞ்ச காலம் சென்ற பின்னர் குதிரைப் பந்தயத்தை ஒழித்தா லென்ன? இல்லை—ஒழிக்காமலே இருந்தால்தானென்ன? பணத்தை வீணாக்கிறைப்பவர்கள் எப்போ தும் இறைத்துக் கொண்டுதான் இருப்பார்கள்! குதிரைப் பந்தயம் இல்லாவிட்டால் சூதாட்டத்தில்— சூதாட்டம் இல்லாவிட்டால் கட் குடியில்—அதுவும் இல்லாவிட்டால் இன்னொன்றில்! நாய்வாலை நிமிர்த்த முடியுமா—சூரியனை மறைக்க முடி யுமா—பூனையின் திருட்டெண்ணத் தைத் தொலைக்கமுடியுமா—குதி ரைப் பந்தயச் சூதாடிகளை மாற்ற முடியுமா—அதெல்லாம் இயலாத காரியங்கள். குதிரைப் பந்தயத்தை நிறுத்தினால், (1) ஆட்சியாளருக்குப் பண வருவாய் குறையும், (2) ஜாதி குதிரைகளின் வளர்ச்சி கெடும். (3) நல்லதோர் பொழுதுபோக்கு முறை ஒழியும். (4) பணக்காரர்க ளின் பணம் பாழாவதற்குரிய சிறந்ததோர் கருவி அழியும். ஆகவேதான் கூறுகிறோம் குதி ரைப் பந்தயம் இருந்துதொலையட்டு மென்று! தவறு அப்படிக்கூறுவது? குற்றமா?''

* * *

## 1941-ல்

''பஞ்சு ஆலைகள், பருத்தி ஆலை கள், இரும்புத் தொழிற்சாலைகள், தங்கச் சுரங்கங்கள், பெரிய பாங்கி கள், இன்சூரன்ஸ் கம்பெனிகள், இன்ன பிற நிறுவனங்களையெல் லாம், இனி, ஆட்சியாளர்களே எடுத்து நடத்தவேண்டும். ஏனெ னில் சமுதாயத்தின் நாடிநரம்புகள் போன்ற இந்தத் தொழிற்சாலைக ளும் நிறுவனங்களும் தனிப்பட்ட முதலாளிகளின் கைகளிலேசிக்கிக் கொண்டுள்ள காரணத்தால் நாடு அவர்களின் வேட்டைக்காடு எனத் தக்க நிலையைப் பெற்றிருக்கிறது. அந்த நிறுவனங்கள் அத்தனையும் தேசிய மயமாக்கப்பட்டால்தான், அதாவது, ஆட்சியாளர்களே அவற்றை எடுத்து நடத்தத்தொடங் கினால்தான், சமுதாயம் சீர்பெறும்; நாடு நலம் பெறும்; முதலாளித்வம் தூளாகும்; தொழிலாளிகள் நல் வாழ்வு பெறுவர். மிக அவசர மாகச் செய்யப்படவேண்டிய மிக முக்கியமான தேசியப் பணியாகும் இது.''

## 1951-ல்

''தொழிற்சாலைகளைத் தேசிய மயமாக்குவதா? அதற்குப் பணம்? நடத்த ஆள்? தேவையானதொழில் திறம்? வேண்டியான அறிவுப்பலம்? எங்கிருந்து போவது இவற்றிற் கெல்லாம்? ஒரு பத்தாண்டு காலத் திற்குத் தொழில்களைத் தேசிய மய மாக்குவது என்ற திட்டத்தையே மறந்திருக்க வேண்டியதுதான். தனிப்பட்ட முதலாளிகள் வசமே தொழில்கள் தொடர்ந்து இருக்க வேண்டியதுதான்.''

* * *

## 1941-ல்

''உங்கள் ஊர்ப் பள்ளிக்கூடத் திற்கு விசாலமான கட்டிடம் இல் லையா? என்ன செய்யலாம்—சர்க் காருக்குக் கவலையில்லை! பாலாற் றின்மீது சரியானதோர் பாலம் அமைக்கப்படவில்லையா—ஆமாம். அது ஆட்சியாளர்களின் அலட்சி யத்தின் விளைவு! இந்த மாகாணத் திற்கே நல்ல மருத்துவமனைகள் மிகச் சிலதான் இருக்கின்றனவா— மெய்தான்—இருக்கிறது ஒரு சர்க் கார்—இருந்தென்ன பலன்—கவ னித்தால்தானே இத்தகு காரியங் களை! உங்கள் ஜில்லாவிலே சரி யானநெடுஞ்சாலை இல்லையா?—எப் படி இருக்கும், ஆள்வோருக்கு உங்கள்மீது அக்கறை இல்லாமல் இருக்கும்போது? கல்வி—சுகாதா ரம்—ஆஸ்பத்திரி—ரோட்டு—பாலம் —அணைக்கட்டு—எல்லாவற்றையும்

(14-ம் பக்கம் பார்க்க)

# தி. மு. க. தோழர்கட்கு!

## முக்கிய வேண்டுகோள்.

ஆங்காங்குள்ள திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகள், திராவிட மாணவர் முன்னேற்றக் கழகக் கிளைகள் ஆகியவற்றின் செயலாளர்கள் கீழ்க்கண்ட விவரங்களை அன்புகூர்ந்து உடனடி யாக எமக்கு அனுப்பிவைக்கும்படி வேண்டுகிறோம்.

1. கிளைக்கழகம் அமைந்துள்ள மாவட்டத்தின் பெயர்,

2. கிளைக்கழகத்தின் தற்போதைய செயலாளர், துணைச் செயலாளர், பொருள் உறுப்பினர், விளம்பர உறுப்பினர்களின் பெயர்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:

''போர்வாள்'' அலுவலகம்
147, பவழக்காரத் தெரு
சென்னை 1.

இங்ஙனம்
''போர்வாள் ஆசிரியர்கள்

போர்வாள்

சென்னை 27—10—51 சனிக்கிழமை

# சொன்னோம்! சொல்கிறார்கள்!

## காலம் கடந்த ஞானோதயம்!

★

"இந்தியாவுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் அவ்வளவையும் இந்தியாவிலேயே உற்பத்தி செய்வதற்கு நெடுங்காலம் பிடிக்கும்—உடனடியாக முடியக்கூடிய சிறிய செயல் அல்ல அது" என்று நாம் பல நாட்களாகக் கூறிவந்தோம்.

"ஏன் முடியாது அது? என்னால் முடியும்!" என்று வீர முழக்கமிட்டு வந்தார் விசித்திர சித்தர் கனம் முன்ஷிஜி.

"முடியாது என்றால் நிச்சயமாக முடியாது உங்களால் மட்டுமல்ல—யாராலும் முடியாது. வீர முழக்கம் இட்டுவிடுவதாலேயே உணவுப் பொருள் விளைந்து விடாது" என்று நாம் மீண்டும் எடுத்துக் காட்டினோம்.

"முடியாதென்றா கூறுகிறீர்கள்? முடித்துக் காட்டுகிறேன் பாருங்கள்! 1952 மார்ச் மாதம் முடிவதற்குள்ளாக இந்தியாவுக்குத் தேவையான உணவுப்பொருள் அவ்வளவையும் இந்தியாவிலேயே உற்பத்தி செய்து உலகுக்குக் காட்டிவிட்டுத்தான் மறுவேலை பார்க்கப்போகிறேன்" என்று வாய்ச்சொல் முரசு கொட்டினார் வீராதி வீரர் என்று தன்னை எண்ணிக் கொண்டிருக்கும் விபரீதபுரி வாசி முன்ஷிஜி.

பொருளாதார நிபுணர்கள்

எதிர்க்கட்சித் தலைவர்கள்

மக்களின்குரல் போன்ற பத்திரிகைகள்

பொதுநல இயக்கங்கள்

கட்சிப் பற்றற்ற அறிஞர்கள்

உணவுத் துறை வல்லுநர்கள்

பிறநாட்டு நல்லறிவாளர்கள்

அனைவருமே கூறினர் 1952 மார்ச் மாதத்திற்குள்ளாக சுயதேவையைப் பூர்த்தி செய்வதென்பது சிறிதளவும் இயலாத காரியமென்று!

கேட்டாரா முன்ஷி? கேட்பாரா அவர்? "யார் எதைக் கூறினால் எனக்கென்ன?" என்கிற எரிச்சல் மொழிகளை வீசினார். "சுயதேவைப் பூர்த்தி நிச்சயம் நிறைவேறும்" என்கிற சொற்சிலம்ப வித்தையைத் தொடர்ந்து நடத்திக் காட்டினார்.

வார்த்தை ஜாலங்களை விளையாடிப் பார்த்தார்—சுயதேவை பூர்த்தியாகவில்லை.

மாம் நடுவிழா நடத்திப் பார்த்தார்—சுயதேவை பூர்த்தியாகவில்லை,

வாரத்திற் கொருவேளை பட்டினியிருங்கள் என்கிற உபதேச காண்டத்தை உற்சாகத்துடன் இயற்றிப் பார்த்தார்—சுயதேவை பூர்த்தியாகவில்லை.

சோமநாதபுர ஆலயத்தை ஜோரான முறையில் ஜோடித்துப் பார்த்தார் — சுயதேவை பூர்த்தியாகவில்லை.

"பட்டினியல் துடிதுடித்துப் பாட்டாளிகள் பலர் மாண்டாலும் சரி, வெளிநாட்டு உணவை ஒருபோதும் இறக்குமதி செய்ய மாட்டேன்' என்கிற விசித்திர சூளுரையை உரைத்துவிட்டு அந்த விபரீதப் பாதைவழி நடந்துப் பார்த்தார் — சுயதேவை பூர்த்தியாகவில்லை.

"ஆக மொத்தம் நமக்கிருக்கும் உணவுப பற்றாக்குறை எல்லாம், இப்போதிருக்கும் உற்பத்தியில், பத்தில் ஒரு பங்கு அளவுதானே இருக்கும்? இதைக்கூடவா நம்மால் உற்பத்தி செய்ய முடியாது?" என்கிற காரண காரிய விளக்கத்தை மாகாணந்தோறும் சென்று முரசறைந்து பார்த்தார்—அப்போதும் சுயதேவை பூர்த்தியானபாடில்லை.

வீரமுழக்கம்— அதிர்வேட்டு —விசித்திர வியாக்யானம்—விபரீத வாக்குவாதம்—வாணவேடிக்கை இயக்கங்கள்—இன்பக் கனவுத் திட்டங்கள் என்று என்னென்ன முறைகள், வழிகள், திட்டங்கள், அவருக்குத் தெரியுமோ, அவ்வளவையும் கையாண்டு பார்த்தார் — ஆறும் சுயதேவை பூர்த்தியாகவில்லை

அழுத்தந் திருத்தமாக அவர் குறிப்பிட்ட அந்த "இன்ப நாள்"—சுயதேவை பூர்த்தியாகி விடுமென்று அவர் சொல்லிக்

காட்டிய அந்த "சொகுசு நாள்' —1952 மார்ச் 1-ம் தேதி —இதோ வேகவேகமாக நெருங்கிவருகிறது. ஆனால் சுய தேவைப் பூர்த்தியோ துளியளவும் நிறைவேறக் காணோம்.

பார்த்தார் முன்ஷீஜி. விழித்தன அவர் கண்கள். ஒழிந்தது அவர் வீம்பு. எழுந்து உட்கார்ந்தார் பரபரப்புடன். உண்மையை ஒப்புக்கொண்டுவிடுவது என்கிற மகத்தான முடிவுக்குத் திடீரென வந்துவிட்டார் இந்தக் கிழமை.

**"இந்தியா, தனக்குத் தேவையான உணவுப் பொருள்கள் அவ்வளவையும் தானே உற்பத்தி செய்துகொள்வதென்பது உடனடியாக முடியக்கூடிய காரியம் அன்று. அத்தகைய நிலைமை உருவாக இன்னும் எத்தனையோ ஆண்டுகள் கழிந்தாகவேண்டும்."**

13—10—51 அன்று புதுடில்லியில் நடைபெற்ற அகில இந்தியப் பெண்கள் உணவு மாநாட்டில்தான் உணவமைச்சர் முன்ஷி திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார் இந்தத் திருவாசகத்தை!

உணவு அமைச்சர் முன்ஷிஜிக்கு இப்போது ஏற்பட்டுள்ள இந்த ஞானோதயம் மட்டும் சற்று முன்னதாகவே ஏற்பட்டிருந்தால்......?

வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருளை ஏராளமாக இறக்குமதி செய்திருக்கலாம்.

எல்லோருக்கும் பதினாறு அவுன்சை எளிதாக அளித்திருக்கலாம்.

ஆறவுன்ஸ் ஆட்சியாளர்கள் என்னும் அவமானச் சொற்றொடரை உருவாகாமல் தடுத்திருக்கலாம்.

நாடெங்கும் நிகழ்ந்திருக்கும் பட்டினிச் சாவுகளை நடவாமல் நிறுத்தியிருக்கலாம்.

மக்களைக் கண்டாலேயே மந்திரிகள் அஞ்சி நடுங்கி ஒதுங்க வேண்டி இருக்கின்ற இன்றைய பரிதாப நிலைமையையும் ஏற்படாமல் தடுத்திருக்கலாம்.

பட்டினி மந்திரி முன்ஷி என்று, இப்போது, நாடெங்கும் பவனி வருகிறதே புதியதோர் வாசகம், அந்த வாசகத்தின் வீதி உலாவையும் நிச்சயம் நிறுத்தியிருக்கலாம்.

ஆம்! உண்மை! ஸ்ரீலஸ்ரீ முன்ஷிஜீக்கு இப்போது ஏற்பட்டுள்ள "ஞானோதயம்" மட்டும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே ஏற்பட்டிருந்தால், இவ்வளவு விபரீதங்களையும் நிகழவொட்டாமல் தடுத்திருக்க முடியும் காங்கிரஸ் ஆட்சியாளர்களால்!

ஆனால் என்ன செய்வது? பழமைப் பாதுகாவலர் ஸ்ரீமான் முன்ஷிஜீக்கு, ஞானம், எப்போதுமே காலம் கடந்துதானே உதயமாகிறது!

* * *

டில்லி அமைச்சர் ஸ்ரீலஸ்ரீ முன்ஷிஜிக்கு மட்டுமல்ல, சென்னை அமைச்சர் திருவாளர் காளா வெங்கட்ராவுக்குக் கூட, ஞானம், காலம் கடந்துதான் உதயமாவது வாடிக்கை என்பது, இப்போதுதான் நமக்குத் தெரியவந்திருக்கிறது.

தோழர் காளா, சென்னை அமைச்சர் குழுவிலே பொறுப்புள்ள ஒரு பதவி வகிப்பவர். ஏனோதானோ அல்ல—எடுபிடி நிலையினர் அல்ல — நலத்துறை அமைச்சர் என்னும் நல்லதோர் நிலையில் இருப்பவர். சென்னைக் காங்கிரஸ் என்னும் கடலிலே ஓமந்தூரார் கப்பல் ஓடிக்கொண்டிருந்த போதும் சரி, அந்தக் கப்பல் கவிழ்க்கப்பட்டு குமாரசாமியார் ஓடம் மிதக்கவிடப்பட்ட காலத்திலும் சரி, தோழர் காளாவுக்குள் அமைச்சர் பதவி நிச்சயமாக 'ரிசர்வ்' செய்யப்பட்டுதான் இருந்தது. அனைத்திந்தியக் காங்கிரசின் செயலாளராக இருப்பதற்காக அவராக விலகியிருந்த சென்ற ஓராண்டுக் காலத்தை மறந்துவிட்டுப் பார்த்தால், சென்னை அமைச்சர் குழு என்றால் காளா வெங்கட்ராவ், காளா வெங்கட்ராவ் என்றால் சென்னை அமைச்சர் குழு என்று சொல்லத்தக்க அளவுக்கு சென்னை அமைச்சர் குழுவிலே மகத்தான செல்வாக்கும் சிறப்பான இடமும் பெற்றுத் திகழ்ந்தவர்-இன்றும் திகழ்பவர்—காளா வெங்கட்ராவ்.

"அன்புள்ள அமைச்சர்களே—பணிவுடன் கூறுகிறோம், கேட்டிடுங்கள்! தென்னாட்டு மக்களின் நிலையான உணவுப்பொருள், அரிசி! கோதுமையோ அவர்கள் விரும்பாதது—அவர்களுக்குச் சிறிதும் தேவையில்லாதது! வேண்டாத கோதுமையை இங்கே இறக்குமதி செய்யாதீர்—விரும்பாத மக்கள் மீது அதைக் கட்டாயமாகத் திணிக்காதீர்" என்று காளா வெங்கட்ராவையும் அவரைச் சார்ந்த ஏனைய அமைச்சர்களையும் பார்த்து எத்தனையோ முறை நாம் எடுத்தெடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

எடுத்துக் கொண்டார்களா நம் பேச்சை? இல்லை! கிடையாது!

நம் மக்களுக்குக் கோதுமை துளியும் பிடிக்காதே என்று நாம் சொன்னால், பிடிக்குமோ பிடிக்காதோ, சாப்பிட்டுத் தான் ஆகவேண்டும் என்று அவர்கள் அதிர்வேட்டு எழுப்பினார்கள்.

வேறு எந்தப் பிரச்சினையிலே வேண்டுமானாலும் கட்டாய முறை இருக்கலாம், உணவுத்

(12-ம் பக்கம் பார்க்க)

# சீறும் எரிமலை—சிரிக்கும் பூந்தோட்டம்!

## அழிந்துபடவேண்டிய அவமானச் சின்னங்கள்!

## ஜாதிக்கு ஜாதி வேறுபடும் நீதி!

★

"அக்கிரமம்!"

"அநியாயம்!"

"மிக மிகத் தவறான போக்கு!"

"ஜனநாயகக் கோட்பாட்டிற்கே வேட்டுவைக்கும் சம்பவம்!"

"சர்வாதிகாரப் பாதையில் செல்லத்துவங்கிவிட்டார் பிரதமர்!"

"கூடாத திட்டம்—ஆகாத நிகழ்ச்சி."

"நாகரிக உள்ளம் படைத்த யாரும் ஒப்புக்கொள்ள முடியாத அநீதி!"

"எல்லோராலும் கண்டிக்கப்பட வேண்டிய இழுக்கான பாதை."

"நேருவின் பயணம் இது—ஜனநாயகப் பயணமல்ல."

"பொதுமக்கள் பொங்கி எழுந்து புரட்சி செய்யவேண்டும் இத்தகைய பொல்லாங்கான போக்குகளை எதிர்த்து!"

இப்படியெல்லாம் நெருப்புப் பொறிகளை அள்ளி வீசின தேசிய ஏடுகள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால்.

கோபம்கொப்பளித்துக்கொண்டு வந்தது அந்த ஏடுகளின் எழுத்துக்களில்.

ஆத்திரம் அலைமோதிப் பாயலாயிற்று அந்த இதழ்களின் தலையங்கங்களில்;

ஆவேசமும்ஆக்ரோஷமும் அந்த இதழ்களின் பக்கத்திற்குப் பக்கம் பயங்கரக் காட்சி வழங்கின.

மகத்தான அக்கிரமம் நடந்துவிட்டது—மாபெரிய ஜனநாயகக் கோட்பாட்டிற்கு ஆபத்து நேர்ந்துவிட்டது என்றி அலறித் துடித்தன அந்த ஏடுகள்.

நடந்தது இதுதான்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் பாகிஸ்தான் தந்தை ஜனாப் ஜின்னா மரணமடைந்துவிட்டார்.

அவர் மரணமடைந்த நேரத்தில் பாகிஸ்தானின் பிரதமராக இருந்தவர் ஜனாப் லியாகத் அலிகான்.

ஜனாப் ஜின்னா மரணமடைந்ததும் பாகிஸ்தான் பிரதமர் லியாகத் அலிகானையே, அந்த நாட்டின் முஸ்லிம் லீக், தங்கள் கட்சியின் தலைவராகவும் தேர்ந்தெடுத்துக் கொண்டது.

கட்சிக் கட்டளையை மறுக்கமுடியாமல், லியாகத் அலிகான், நாட்டின் பிரதமராக இருக்கும் பெரிய பொறுப்புடன், லீகுக்குத் தலைவராக இருக்கும் புதிய சுமையையும் ஏற்றுக்கொள்ள இசைந்து விட்டார்.

இந்த நிகழ்ச்சியைக் கண்டுதான் இந்தியாவின் தேசிய ஏடுகள் தீப்பொறி பறக்கும் நடையிலே லியாகத் அலிகானைத் தாக்கி எழுதும் திருப்பணியை மேற்கொள்ளலாயின.

ஒரு நாட்டின் முதலமைச்சர் அந்த நாட்டை ஆளும் அரசியல் கட்சியின் தலைவராகவும் இருப்பதென்றால் அதைவிட அக்கிரமம் வேறென்ன இருக்கமுடியும் என்று அந்த ஏடுகள் ஆத்திரத்துடனும் கேட்கலாயின.

இவ்வளவு மகத்தான பொறுப்புக்கள் இரண்டையும் ஒரே மனிதரிடம் ஒப்படைப்பது அவரை ஒரு குட்டி ஹிட்லராக ஆக்குகிற அநீதியான காரியம்தானே என்று அந்த ஏடுகள் கொக்கரிக்கவும் கொந்தளிக்கவும் சிறிதும் தயங்கவில்லை.

ஆளுங் கட்சித் தலைவரே நாட்டின் பிரதம மந்திரியாகவும் ஆகிவிட்டால், சர்க்கார் என்பது வேறு, ஆளும் கட்சி என்பது வேறு என்பதற்கு என்ன ஆதாரம் இருக்க முடியும் என்று விசித்திர வியாக்யானம் செய்யவும் அந்த ஏடுகள் துளியும் அஞ்சவில்லை.

'சொல்லவேண்டும் விளக்கி? பாகிஸ்தான் சர்க்கார் என்பதே இனி, லீக் கட்சி இயந்திரத்தின் ஒரு சிறு சக்கரமாகத்தான் பாவிக்கப்படும்—நிச்சயம்" என்று அவசர ஆருடம் கணிக்கவும் அரசியல் ஜாதகம் தீட்டவும்கூட அந்த இதழ்கள் தயார் தயார் என்று முன் வந்து நிற்கலாயின.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அந்த ஏடுகள் தீட்டிய எழுத்துக்களும் காட்டிய கோபமும் இப்படி இருந்தன.

ஆனால் இந்த ஆண்டு, அந்த ஏடுகளின் உள்ளமும் உரையும் எப்படி இருக்கின்றன தெரியுமா?

பாருங்கள் அந்த விசித்திரத்தை!

"களிப்பூட்டும் செய்தி!"

"சிந்தையில் தேன் பாய்ச்சும் சீரிய நிகழ்ச்சி."

"உள்ளத்தை மகிழ்ச்சி வெள்ளமாக்கும் சம்பவம்."

"என் சொல்வேன் அடடா என் தன் தோள்களெல்லாம் பூரிக்குது இச்சேதி கேட்டு—என்று பாடி ஆட வேண்டிய புது மகிழ்ச்சிச் செய்தி இது!"

"இனி, நாடு நல்வழிப்படும், சமுதாயம் சீர்திருந்திவிடும். மக்கள் மகிழ்ச்சி அடைவர். கேடுகள் யாவும் தொலைந்துவிடும்."

"நாட்டின் பிரதமரே ஆளுங் கட்சியின் தலைவராகவும் வந்துவிட்

(15-ம் பக்கம் பார்க்க)



# திராவிட முன்னேற்றக் கழக மாநில மாநாடு.

மாநில மாநாட்டுக்கு வேண்டிய ஏற்பாடுகள் மிகத்துரிதமாக நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

மாநாடு நவம்பரில் நடைபெற வேண்டியது டிசம்பர் 13, 14, 15, 16, தேதிகளில் நடத்துவதென்பது உறுதிப்படுத்தப் பட்டு தேதியிட்ட சுவரொட்டிகளைத் தயார் செய்யும் பணி தோழர்கள் பாலு பிரதர்சாரிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது இவைகள் தயாரானதும் மாவட்டக் கிளைகளுக்கு சீக்கிரத்தில் அனுப்பிவைக்கப்படும்.

கலைக் கண்காட்சிக்கு வேண்டிய வேலைகள் அநேகமாகப் பூர்த்தியாகும் தறுவாயில் இருந்து வருகின்றன.

பந்தல், கண் காட்சி சாலை, பிரதி நிதிகள் தங்குவதற்கான பந்தல் முதலிய வேலைகளை அதற்கான நிபுணர்களைக்கொண்டு செய்வதற்கு வசதிகள் செய்தி தரப்பட்டு விட்டன

மாநாட்டு அலுவலகம் தற்காலிகமாக மாநாடு நடக்கும் இடத்திலேயே அமைப்பதற்கான வேலை துவங்கி விட்டது.

மாநாடு சம்பந்தமான தமிழ் ஆங்கில வெளியீடுகள் இந்தியாவிலுள்ள முக்கிய நகரங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

மாநாடு சம்பந்தமாக நடைபெறவிருக்கும் பொதுக்குழுக் கூட்டம் நவம்பர் முதல் வாரத்தில் மதுரையில் நடைபெற ஏற்பாடாகி வருகின்றது என்பதை சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சி. என். அண்ணாதுரை
பொதுச் செயலாளர்

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

துறையிலே கட்டாய முறை இருக்கலாமா என்று நாம் கேட்டால், அரிசியை விட அதிக சத்து கோதுமையில் தானே இருக்கிறது — தெரியாதா என்று அவர்கள் "விஞ்ஞானம்" பேசினார்கள்.

"சத்து இருக்கலாமய்யா கோதுமையில்—ஆனால் அதை உண்டு பழகிய வழக்கம் இல்லையே அய்யா தென்னாட்டில்?" என்று நாம் ஐயவினாவை எழுப்பினால், இல்லாவிட்டால் என்னையா? இனி ஏற்படுத்திவிட்டால் போகுதையா! என்று அவர்கள் புதிய கீதம் பாடலானார்கள்.

"கீதமும் நாதமும் எழுப்பிப் பயனில்லை—கோதுமை உணவு நம் மக்கட்குச் செரிப்பதில்லை" என்று நாம் விளக்கிச் சொன்னால், செரிக்குமோ செரிக்காதோ—அதைத்தான் கொடுப்போம் நாங்கள்-உண்ணத்தான் வேண்டும் மக்கள் என்று அவர்கள் வீண்வாதம் புரியலானார்கள்.

நம் வாதம் அவர்கள் செவி புகவில்லை.

நம் பேச்சு அவர்கள்முன் எடுபடவில்லை.

கோதுமை-கோதுமை என்று அதன் நாமத்தையே அவர்கள் பஜிக்கலானார்கள். மீண்டும் மீண்டும் கோதுமையையே தென்னாட்டுக்குள் இறக்குமதி செய்யலானார்கள்.

முடிவு என்ன ஆயிற்று?

என்ன ஆகும்?—கோதுமை, கடைகளில் தேங்கலாயிற்று—தேங்கிய பொருள், பிறகு மக்கி மடியலாயிற்று—நஷ்டம், ஆட்சியாளர்களின் பணப்பெட்டியைச் செல்லெனெ அரிக்கலாயிற்று—பணம் பாழாகும் படலம், காலதேவனால், கிடுகிடுவென எழுதப்படலாயிற்று.

வடநாட்டிலிருந்து கோதுமையாக வந்த பொருள், 'இங்கே, சிந்துவாரின்றிச் சீரழிந்து கெட்டு, குப்பைத் தொட்டிக்குரிய கழிவுப் பொருளாக மாறலாயிற்று.

நம் பணம் சென்றது வடநாட்டுக்கு—அந்நாட்டுக் கோதுமைக்காக.

அந்தக் கோதுமை சென்றது தென்னாட்டில்—பாழும் குப்பைத் தொட்டி இருக்கும் இடம் நோக்கி

நாம் புட்டுப் புட்டு விளக்கிய போது சென்னை அமைச்சர்களுக்கு ஏற்படாத "ஞானம்", இந்தக் குப்பைத் தொட்டிக் காட்சியைக் கண்டபோது தான் வேகவேகமாக ஏற்படலாயிற்று.

"தென்னாட்டு மக்கள் பட்டினி கிடந்து செத்தாலும் சாவார்களே தவிர, அரிசி உணவுக்குப் பதிலாகக் கோதுமை உணவை ஒருக்காலும் ஏற்கமாட்டார்கள். இந்த உலகத்தில் உற்பத்தியாகும் கோதுமை அவ்வளவும் அவர்கள் வீட்டுத் தாழ்வாரத்தில் கொண்டுவந்து கொட்டப் பட்டாலும் கூட, தென்னாட்டு மக்கள், அரிசி கிடைக்கவில்லை என்றால், பட்டினி கிடந்தாலும்கிடப்பார்களே தவிர, அந்தக் கோதுமை உணவை ஏறெடுத்தும் பார்க்க மாட்டார்கள். இது தென்னாட்டு மக்களின் நெடுங்காலப் பழக்கத்தால் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள பண்பு."

காளா வெங்கட்ராவ் கருத்துரை பகர்ந்திருக்கிறார் இது போல! எப்போது? வேண்டாத கோதுமை இங்கே இறக்குமதியாகி, வீணாகிப் போவதற்கு முன்னாலேயே? அதுதானே கிடையாது! கொள்ளை கொள்ளையாகக் கோதுமை இங்கே இறக்குமதியாகி, செல்லுக்கும் மண்ணுக்கும் அது இரையாகி அழிந்த பிறகு!

கொட்டில் கதவை இழுத்துப் பூட்டுகிறார் காளா வெங்கட்ராவ்—குதிரை உள்ளே இருக்கும் போதா—இல்லை—குதிரை பறிபோன பிறகு!

பாற்கிண்ணத்தைப் பாதுகாப்பான இடம் தேடிப் பத்திரமாக மூடிவைக்கிறார் தோழர் காளா—திருட்டுப் பூனை, பாற்கிண்ணத்தை உருட்டித் தள்ளுவதற்கு முன்னரா—அல்ல—பால் முழுதும் 'பூமாதேவி"க்கு அபிஷேகம் ஆனதற்கு அப்புறம்!

ஜுரத்தால் தவித்த குழந்தைக்கு அவசர அவசரமாக இஞ்சக்ஷன் செய்கிறார் காளா—மரணப் பள்ளத்தில் குழந்தை தவற் விழுவதற்கு முன்னதாகவா—கிடையாது—சாவு, சிசுவை அணைத்துக் கொண்டதற்கு அப்புறம்!

இப்படியெல்லாம் செய்வதற்குப் பெயர் புத்திசாலித்தனம் அல்லவே என்று புகலலாம் நீங்கள். அல்லதான்! ஆனால் இப்படிச் செய்வதற்குப் பெயர்தான் தேசபக்தி என்று தெளி

"போர்வாள்"
சந்தா விவரம்
★
ஓராண்டு ரூ. 6 8 0
6 மாதம் ரூ. 3 4 0
போர்வாள் அலுவலகம்
பவழக்காரத் தெரு,
சென்னை 1.

வாகக் கூறுகிறது அகில இந்திய காங்கிரஸ் அகராதி.

* * *

"ஓரளவு படித்தவர்களாகவும் பண்பட்ட நெறி படைத்தவர்களாகவும் உள்ள மக்களிடத்திலே கூட, ஆங்கில மொழியின் மீது, அவசியமற்ற ஆத்திரமும் வெறுப்பும், இந்நாளிலும் காணப்படுகின்றன. அறிவுத்தெளிவற்ற இந்த மனப்போக்கை நான் மனமார வெறுக்கிறேன்.

"இன்னும் குறைந்தது ஒரு தலைமுறைக் காலத்திற்காவது, நாம், ஆங்கில மொழிப் பயிற்சியையும் பழக்கத்தையும் கைவிட முடியாது என்பது என்னுடைய திட்டமான முடிவாகும்.

"ஆங்கில ஏகாதிபத்யத்தின்மீது காட்டப்பட்ட நியாயமான வெறுப்பை ஆங்கில மொழியின்மீதும் காட்டத் தொடங்குவது முறையுமல்ல — அறிவுடைமையும் ஆகாது. நம்முடைய நாட்டில் எவ்வளவு பேருக்கு ஆங்கிலத்தைக் கற்கும் விருப்பம் இருக்கிறதோ அவ்வளவு பேருக்கும் ஆங்கிலத்தைக் கற்றுத் தரவேண்டியது நம்முடைய முக்கிய கடமையாகும்.

"30 என்கிற எண்ணை எழுதி, அதன் பக்கத்திலே 30 பூஜ்யங்களைப் போட்டால் எந்த எண் வருகிறதோ, அந்த எண்ணுக்கு உரிய அளவு புத்தகங்கள், ஆங்கிலத்தில் இதுவரை வெளியிட்டிருப்பதாக நான் சென்ற ஆண்டில் கேள்விப்பட்டேன், உலகத்திலே உள்ள வேறு எந்த மொழியும், எனக்குத் தெரிந்தவரை, இவ்வளவு ஏராளமான புத்தகங்களைப் பெற்றிருக்கவில்லை.

"இந்த அளவுக்குச் சிறந்து ஓங்கி தழைத்து வளர்ந்திருக்கின்ற ஒரு மகத்தான மொழியினைப் பயிலும் வாய்ப்பை நாம் நம் எதிர்காலச் சந்ததிகளுக்குத் தரத் தவறிவிட்டால், அவர்களுக்கு நாம் இழைக்கக்கூடிய குற்றம் அதைவிடப் பெரியது வேறொன்று இருக்கமுடியாது.

'ஹிந்தியின்மீதோ அல்லது தாய் மொழிகளின் மீதோ இருக்கும் ஆழ்ந்த பற்றுதல் காரணமாகச் சிலர் ஆங்கிலத்தின்மீது எரிந்து விழக்கூடும். ஆனால் ஆங்கிலம் உலகப் பொது மொழி. எனவே அதை யாரும் அலட்சியமாகக் கருதி ஒதுக்கிவிட முடியாது."

அறிஞர் அண்ணாதுரையின் குரலா இது என்று கேட்கத் தோன்றும் திராவிட முன்னேற்றக் கழக வாலிபர்களுக்கு

பெரியார் இராமசாமியின் பேச்சிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு பகுதியோ இது என்று பேசிடத் தோன்றும் திராவிடக் கழகத் தோழர்களுக்கு.

ஆனால் உண்மை என்ன தெரியுமோ?

அண்ணாவின் முழக்கமல்ல— பெரியாரின் பேச்சமல்ல— அமைச்சர் மாதவனாரின் அரிய உரை, இது.

15—10—61 அன்று, சென்னையில், பிரிட்டிஷ் கவுன்சில் அலுவலகம் என்ற நிலையத்தில், பல வெள்ளையர்கள் முன்னிலையில், மலையாளத்து மாவீரர் மாதவமேனனார் நிகழ்த்திய சொற்பொழிவில்தான், இந்தச் சிறந்த அறிவுரை காணப்படுகிறது.

இதே அறிவுரையைத் திராவிட இயக்கத் தலைவர்கள் சென்ற பத்தாண்டுக் காலமாகச் சொல்லி வந்தபோது இதே மாதவனார்களும் இவர்களைத் தங்கள் தலைவர்களாகக் கொண்டுள்ள தேசியத் திருமேனிகளும்

(16-ம் பக்கம் பார்க்க)

அழகுராணி வெறும் கற்பனையின் குழந்தையல்ல வரலாறும் கற்பனையும் ஈன்றெடுத்த மகள் அவள். ஒரு தேனியின் வாயிலுள்ள—தேன் நடத்திய போராட்டத்தை அவள் கூறுவாள். அந்தத் தேனியைச் சிக்க வைக்க ஒரு புரோதச் சிலந்தி கட்டிய வலையை அவள் சித்தரிப்பாள்.

அழகு ராணி

க. அன்பழகன் எம். ஏ., தீட்டியது

விலை ரூபா 1 4 0

தனிப் புத்தகம் வேண்டுவோர் ரூ 1-4-0 M O செய்யவும்
விற்பனைக் கழிவு 25% அனுப்பும் செலவு இனும்.

கிடைக்குமிடம் :—

எம். சூரி.

14-ஏ, சுப்பையர் தெரு, சென்னை-1.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கவனிக்கவேண்டிய பொறுப்பும் வசதியும் வாய்ப்பும் சூழ்நிலையும் வாய்க்கப் பெற்றவர்கள் ஆட்சியாளர்கள், அவர்கள்தான் இவற்றையெல்லாம் கவனித்தாக வேண்டும். வேறு யாரால் முடியும் இவற்றைக் கவனிக்க—வேறு யாருக்கு இருக்கின்றன இவற்றைக் கவனிப்பதற்குத் தேவையான வசதிகள்?''

## 1951-ல்

ஆஸ்பத்திரியா—சர்க்கார் அமைக்க வேண்டும்! பள்ளிக்கூடமா—சர்க்கார் தொடங்க வேண்டும்! பாலாற்றுப் பாலமா—சர்க்கார் கட்ட வேண்டும்! வைகையாற்று அணைக்கட்டா—சர்க்கார் நிறுவ வேண்டும்! நீண்டதோர் சாலையா—சர்க்கார் போடவேண்டும்! சிறியதோர் நகரமா—சர்க்கார்தான் கவனிக்க வேண்டும்! இப்படி, எதற்கெடுத்தாலும் சர்க்கார் சர்க்கார் என்று சர்க்காரையே எதிர்பார்த்தால் எந்தக் காரியமும் நடக்காது. ஆங்காங்குள்ள பொதுமக்களே தான் இப்படிப்பட்ட காரியங்களைக் கவனித்துக் கொள்ள வேண்டும்! ஆஸ்பத்திரிகள் அமைப்பது, பள்ளிக்கூடங்கள் நிறுவுவது, இவற்றையெல்லாம், தனிப்பட்ட தயாள குணவான்கள் தங்கள் சொந்தச் செலவிலே செய்திடவேண்டும்! தொட்டதற்கெல்லாம் சர்க்கார் சர்க்கார் என்றால் சர்க்கார் எப்படிச் செய்திட முடியும் எல்லாக் காரியங்களையும்?''

* * *

## 1941-ல்

"கண்ட கண்ட இடங்களிலெல்லாம் கள்ளமார்க்கெட் தழைத்திருக்கிறது. இந்தக் கள்ளமார்க்கெட் பூதங்களைச் சவுக்கால் அடித்துத் திருத்தவேண்டும் இல்லையேல் சிறைக்குள் தள்ளிப் பூட்ட வேண்டும். இவர்கள், சமுதாயத்திற்குத் துரோகிகள், நாட்டுக்குப் பகைவர்கள், மக்களுக்கு எதிரிகள்! விட்டுவைக்கக்கூடாது இவர்களை ஒரு கணநேரமும்! துணிந்து இறங்கவேண்டும் சர்க்கார், இவர்களை ஒழித்துக்கட்டும் உயரிய பணியினில்! இதைக்கூட செய்ய முடியாத சர்க்கார் எதற்காக இருக்கவேண்டும்! எங்களிடத்திலே மட்டும் அதிகாரம் இருக்குமானால் கள்ள மார்க்கெட் கழுகுகளைக் கழுவி லேற்றிவிட்டுத்தான் மறுவேலை பார்ப்போம்.''

## 1951-ல்

"கள்ள மார்க்கெட் பூதம் ஒழிக்கப்படத்தான் வேண்டும். ஆனால் அதை ஆட்சியாளர்கள் மட்டுமே ஒழித்துவிட முடியுமென்றெண்ணுவது வெறும் பைத்தியக்காரத்தனம். பொதுமக்களின் தீவிர ஒத்துழைப்பு ஆட்சியாளர்களுக்குக் கிடைத்தால்தான் கள்ளமார்க்கெட் அழியும், ஆனால், பொதுமக்கள் [illegible] கள்ளமார்க்கெட்டை அதிதீவிரமாக ஆதரிக்கிறார்களே! இந்நிலையில் கள்ளமார்க்கெட்டை ஒழிக்கவில்லை ஒழிக்கவில்லை என்றால் எப்படி ஒழிக்க முடியும் நாங்கள்? எங்களிடம் அதிகாரம் வந்தால் கள்ளமார்க்கெட்காரர்களைத் தூக்குமேடையில் ஏற்றுவோம் என்று அன்று கொடுத்தீர்களே வாக்குறுதி—என்ன ஆயிற்று அந்த உறுதியுரை என்று எத்தனையோ பேர் கேட்கிறார்கள். தூக்குமேடையில் ஏற்றுவோம் என்றால் தூக்குமேடையிலேயா ஏற்றிவிடுவது? சுற்றி வளைத்துப் பேசுவானேன் சுருக்கமாகவே கூறுகிறோம் பொதுமக்கள் ஒத்துழைத்தால்தான் கள்ளமார்க்கெட்டைத் தொலைக்க முடியும்.''

---

## திராவிட முன்னேற்றக் கழகம்
### சென்னை 1-வது வட்டக் கிளை

இக் கழகத்தில் அங்கத்தினர்களாகச் சேர விரும்புவோர் சென்னை, பவழக்காரத் தெரு 147-எண்ணுள்ள 'போர்வாள்' அலுவலகத்தில் வந்து பதிவுசெய்து கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

இரா. சண்முகம்
செயலாளர்

---

## நகரி புதுப்பேட்டை
### தி. மு. கழகத் துவக்க விழா

27-10-51 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நகரி புதுப்பேட்டையில் நடைபெறும். தலைவர்: சா. பொன்னுசாமி, திராவிடன் ஆசிரியர், N. V. நடராசன், போர்வாள் ஆசிரியர்: காஞ்சி மணிமொழியார், திருத்தணி ரஹீது மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவர். ஒலிபெருக்கி உண்டு.

---


## சிறந்த புத்தகங்கள்

### அண்ணாவின் அறிவுக்களஞ்சியங்கள்

| | | |
|---|---|---|
| செல்லப் பிள்ளை | 1 | 0 |
| ஆலைபூரார் உபதேசம் | 0 | 12 |
| தேவலீலைகள் | 0 | 8 |
| சாது | 0 | 8 |
| தொழிலாளர் பிரச்னை | 0 | 6 |
| வந்தது விபத்து | 0 | 12 |
| எமிலி சோலா | 0 | 6 |
| போர் முரசு | 0 | 8 |
| நாடும் ஏடும் | 0 | 6 |
| [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | 0 | [illegible] |
| நாடகத்தில் மறுமலர்ச்சி | 0 | 1½ |
| ஓய்வு நேரம் | 0 | 2 |
| தோழமையா விரோதமா | 0 | 4 |
| தீ பரவட்டும் | 0 | 8 |

### இராதாமணாளன் இன்சுவை ஏடுகள்!

| | | |
|---|---|---|
| மனப்புயல் | 2 | 0 |
| இளவரசி | 1 | 8 |
| பசி | 1 | 0 |
| மூடுபனி | 1 | 0 |
| பாலைவனம் | 0 | 10 |
| கந்தலீலா | 0 | 8 |
| பேசும் பிணம் | 0 | 8 |
| பயாணத்தில் முத்தம் | 0 | 8 |
| புது வெள்ளம் | 0 | 8 |
| துளிதேன் | 0 | 8 |
| இன்பக் கனவு | 0 | 8 |
| அய்யோ கடவுளே | 0 | 3 |
| மதம் அவசியமா | 0 | 3 |

### மற்றும்

| | | |
|---|---|---|
| அதிசய தியாகிகள் | 0 | 12 |
| எது நாகரீகம் | 0 | 12 |
| இலவு காத்த கிளி | 0 | 12 |
| லெனினுடன் சில நாட்கள் | 1 | 0 |
| என் மகள் (சேரன்) | 1 | 0 |
| கலைக்கோயிலா விபசார விடுதியா | 0 | 4 |
| இன்ப இரவு " | 0 | 8 |
| இன்பத்தின் எல்லை | 1 | 0 |
| இலட்சியவாதி | 0 | 5 |
| மனைவி மாற்றம் | 0 | 8 |
| கலிங்கத்து இளவரசி | 0 | 8 |
| எல்லைக்கட்பால் (டி. கே. சீனிவாசன்) | 0 | 8 |
| ஊருக்கு உழைத்தவர்கள் | 0 | 5 |
| எதிர்ப்பிலே வளர்ந்த இயக்கம் | 0 | 8 |
| வாழ்க்கைச் சுழல் (சி. பி. சிற்றரசு) | 0 | 8 |
| கல்வி நீரோடை | 0 | 6 |
| நாசகார சமூகம் | 0 | 8 |
| மல்லிகா | 0 | 8 |

## பகுத்தறிவுப் பாசறை
147, பவழக்காரத் தெரு, சென்னை

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

டார். எனவே இனி நாடும் நல மடையும். ஆளும் கட்சியும் சிர டையும்.''

''நம் நாட்டிற்குச் சிறந்ததோர் எதிர்காலம் இருக்கிறது என்பதைத் தெளிவுபட விளக்கும் சுவைமிக்க சம்பவம் இது.''

''பிரதமர் பதவியைத் தாங்கி இருப்பதே பெருஞ்சுமை. இந்நிலையில் ஆளுங் கட்சியின் தலைவர் பதவியையும் சுமக்க ஒப்புக்கொள்கிறார் பிரதமர் என்றால், அவருடைய [illegible] தியாக புத்தியையும் நேர்மைக் குணத்தையும் யார்தான் கட்டும் எப்படிப் பாராட்டாமல் இருக்க முடியும்?''

''மனிதருள் மாணிக்கம்—மாவீரர் நம் பிரதமர். எனவேதான் அவரால் இவ்வளவு பெருஞ் சுமைகள் இரண்டையும் ஏக காலத்தில் சுமக்க முடிகிறது. என்னே அவர் அருந்திறமை! என்னே அவர் தம் தனிச் சிறப்பு!''

தேசிய ஏடுகள் இதுபோல ஆநந்தகிதம் பாடலாயின இந்த ஆண்டு!

கொதிப்பும் கோபமும்—சென்ற ஆண்டுக்கு முன் ஆண்டு!

ஆநந்தமும் ஆரவாரமும்—இந்த ஆண்டு, இப்போது!

''இது முறையா — சரியா — தருமா?'' — இந்தக் கேள்விகள், முன்பு!

''இதுதான் முறை — இதுதான் சரி—இதுதான் நியாயம்''—இந்த வாசகங்கள், இப்போது!

''விட்டுவைக்கலாமா இந்த விபரீதத்தை''—அன்று இட்ட இடிமுழக்கம் இது!

''தென்றலோ தேனோ நற்கருப்பஞ்சாறோ இது!''—இன்று பேசும் இன்ப உரை இது.

''ஒரே மனிதர் ஒரு நாட்டின் பிரதம மந்திரியாகவும் அதே நாட்டின் ஆளுங்கட்சித் தலைவராகவும் ஒரே சமயத்தில் இருக்கலாமா?''—இதுதான் நம்முன் நிறுத்தப்பட்டுள்ள கேள்வி.

கேள்வி தெளிவாக இருக்கிறது.

ஆனால் இந்தக் கேள்விக்குத் தேசிய ஏடுகள் இரண்டு ஆண்டுகட்கு முன் தந்துள்ள பதில்—சீற்றம்!

ஆனால் இந்த ஆண்டு தந்துள்ள விடை—புன்னகை.

சீற்றமாக இருந்த விடை புன்னகையாக மாறிய மாயம் என்ன?

இந்தக் கேள்வியை எவரும் கேட்காமலிரார்.

இக்கேள்விக்கான விடையைக் கண்டறிந்த பிறகு, இந்தத் தேசிய ஏடுகள், ஏடுகள் அல்ல, இந்தியாவின் நல்ல பெயருக்கு ஏற்பட்டுள்ள களங்கங்கள் என்பதையும் எவரும் கூறாமலிரார்.

இரண்டு ஆண்டுகட்கு முன்பு [illegible] சீறும் எரிமலையாகக் காட்சி தந்த ஏடுகள், இந்த ஆண்டு சிரிக்கும் பூந்தோட்டமாக மாறிய மாயம் என்ன தெரியுமோ?

முன்பு, நாட்டின் பிரதமராக இருந்துகொண்டு, அதே நேரத்தில் ஆளுங் கட்சித் தலைவராகவும் பொறுப் பேற்றுக்கொண்டவர் பாகிஸ்தான் வாசி — இஸ்லாமிய தலைவர்—ஜனாப் லியாகத் அலி கான்.

ஆனால் இன்று, நாட்டின் பிரதமர், ஆளுங் கட்சித் தலைவர் ஆகிய இரண்டு பதவிகளையும் ஏற்றுக் கொண்டிருப்பவர், இந்தியத் துணைக் கண்டத்தவர்—பிராமண குல பூபதி—பண்டித ஜவகர்லால்.

எனவேதான், சீறும் எரிமலை, சிரிக்கும் பூந்தோட்டமாக மாறியிருக்கிறது.

பாகிஸ்தானத்தில், அந்த நாட்டின் பிரதமர் லியாகத், அந்நாட்டை ஆளும் லீக் கட்சியின் தலைவராகவும் ஆனது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு—அப்போது அதைக் காரசாரமாகக் கண்டித்து எழுதின இந்திய தேசிய ஏடுகள்.

இந்தியாவில், இத் துணைக் கண்டத்தின் பிரதமர் நேரு, இத் துணைக் கண்டத்தை ஆளும் காங்கிரஸ் கட்சியின் தலைவராகவும் இருக்க ஒப்புக்கொண்டுள்ளார் இந்த ஆண்டு—ஆனால் இப்போதோ, இதை இதயத்தை மகிழ்விக்கும் இனிய நற்சேதி என்று போற்றிப் புகழ்கின்றன அதே தேசிய ஏடுகள்.

இரண்டு ஆண்டுகட்கு முன்பு, எந்தக் காரியத்தைத் தவிடுபொடியாக்கப்படவேண்டிய தவறான திட்டம் என்று இந்த ஏடுகள் தீட்டிக் காட்டினவோ, அதே காரியத்தைத்தான், இப்போது, வாழ்த்துக் கூறி வரவேற்கவேண்டிய விசேஷ சம்பவம்' என்று எழுதிக் காட்டுகின்றன.

காரணம், அப்போது, அந்தக் காரியத்தைச் செய்தவர்—ஜனாப் லியாகத் அலி கான். ஆனால் இப்போது, அதே காரியத்தைப் புரிபவர்—பண்டித ஜவகர்லால் நேரு.

ஒரு காரியத்தை, ஜனாப் லியாகத் அலி கான் செய்தால், அது, ஜனநாயகக் கோட்பாட்டிற்கே வேட்டுவைக்கும் திட்டமாகிவிடுகிறது.

ஆனால் அதே காரியத்தை அன்பர் ஜவகர்லால் செய்தால், அது உள்ளத்தை மகிழ்விக்க வேண்டிய உன்னத செயலாக மாறிவிடுகிறது.

லியாகத் அலிகான்—இஸ்லாமியர், பாகிஸ்தான் வாசி, லீக் கட்சித் தலைவர்—எனவே அவருக்கு ஒரு நியாயம்!

ஜவகர்லால் நேரு—பிராமண குலத்தவர், இந்தியவாசி, காங்கிரஸ் தளபதி—எனவே அவருக்கு வேறொரு நியாயம்!

ஆளுக்கொரு நீதி! குலத்துக்கொரு நியாயம்!

இந்தியாவில் இருக்கும் தேசிய ஏடுகளின் இழுக்கான மனப்போக்கு இவ்வண்ணம் இருக்கிறது

''கொலை செய்தவன் சூத்திரனா? ஆம் எனில் சீவித் தள்ளு அவனின் சிறுமதித் தலையை!''

''கொலை செய்தவன் பிராமணனா? அப்படியானால் அவனுடைய தலை மயிரைமட்டும் வெட்டி எடுத்துவிட்டு ஊருக்குவெளியே விட்டுவிடு அவனை!''

''வேதம் ஓதுபவன் பிராமணனா? ஆம் எனில் அந்த வேத பாராயணம் குறைவற நடைபெற ஏராளமான பணத்தை எடுத்துக் கொண்டு போய்க்கொடு அவனுக்கு!''

''வேதம் ஓதுபவன் சூத்திரனா அப்படியானால் வெட்டித் தள்ளு அவன் நாக்கை இரண்டு துண்டாக!''

இப்படியெல்லாம் ஜாதிக்கேற்றபடி நீதியை வகுத்திருக்கிறது அதர்ம சாஸ்திரம் என்று அறிஞர்களால் தூற்றப்படுவதும் தர்ம சாஸ்திரம் என்று பூசுரர்களால்

(6-ம் பக்கம் பார்க்க)

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

நம்மீது வீசிய சொல்லடி எவ்வளவு! காகிதக் கணைகள்தான் என்ன கொஞ்சமா?

"தேசத் துரோகிகள்"

"நாட்டைக் காட்டிக் கொடுக்கும் நாசகாலர்கள்"

"சொந்த நாட்டுப் பற்று அற்ற சுயநல சொரூபங்கள்."

"பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின் வால் பிடிக்கும் வீணர்கள்."

"ஆங்கிலத்தின் அடிமைகள்"

"அயல்மொழிப் பித்தர்கள்"

அடே அப்பா! கொஞ்சமா நஞ்சமா அவர்கள் நம்மீது ஏவி விட்ட தூற்றல் பாணங்களும் சுடுசொல் அம்புகளும்!

ஏசல் அகராதியைத் துருவித் துருவிப் பார்த்து, வார்த்தைகளைத் தேடித் தேடிக் கண்டு பிடித்தல்லவா நம்மைத் தாக்கினார்கள்!

"ஆங்கிலம், அகில உலகப் பொதுமொழி—அறிவுச் செல்வம் ஏராளமாக அமைந்த மொழி—விஞ்ஞானப் பாதையை நமக்குக் காட்டிடும் நல்ல மொழி—அற்புதமாக வளர்ந்திருக்கும் அரிய மொழி-ஆகவே அதை நாம் அலட்சியப் படுத்துதல் ஆகாது — அம்மொழிப் பயிற்சியைத் துறந்திடல் கூடாது."

இவ்வளவுதான் நாம் கூறியது. இதற்காகத்தான் நம்மைக் கண்டபடி ஏசினார்கள்—மனம்போனபடி தூற்றினார்கள்.

ஆனால் இன்று?

மாதவனார் பேசுகிறார் அன்று நாம் பேசிய அதே வாசகத்தை!

ஒரே ஒரு வேறுபாடு!

நாம் பேசினோம்—பல ஆண்டுகளுக்கு முன்னர்!

அவர் பேசுகிறார்—காலம் கடந்த பின்னர்!

* * *

முன்ஷி — மாதவமேனன்— காளா — எல்லோருக்குமே, ஞானம், காலம் கடந்த பிறகுதான் உதயமாகிறது.

பொதுவாக காங்கிரஸ் வட்டாரத்திலேயே, அறிவு, நெடுங் காலத்திற்கு அப்புறம் தான் தலையை மெள்ள உயர்த்திடத் தொடங்குகிறது.

எந்தப் பிரச்சினையையுமே திராவிடர் இயக்கம் எடுத்துச் சொல்லுகிறபோது காங்கிரஸ்வாதிகளுக்கு அதை உடனே புரிந்து கொள்ளும் சக்தி இருப்பதில்லை எனவே அவர்கள் நம்மைத் தாக்கத் தயங்குவதில்லை.

ஆனால் பிரச்சினை புரிய ஆரம்பித்தவுடனே, அறிவு ஒளி அவர்கள் உள்ளத்தில் வீச ஆரம்பித்தவுடனே, சிந்தனைக் கதிர் அவர்கள் சொற்களை ஊடுருவத் தொடங்கியவுடனே, அவர்கள் பேச்சு நம்முடைய பேச்சாகவே மாறிவிடுகிறது.

ஆனால் அந்த நிலை ஏற்பட அவர்களுக்கு நீண்ட நேரம் பிடிக்கிறது — காலம் மிக மிக அதிகமாக அவர்களுக்குத் தேவைப்படுகிறது.

உணவுப்பிரச்சினை—மொழிப் பிரச்சினை — அரசியல் பிரச்சினை— எந்தப் பிரச்சினையானாலும் சரி அந்தப் பிரச்சினையைப்பற்றிய ஞானம், திராவிட வட்டாரத்திலே அரும்பி மலர்ந்ததற்கு நெடுங்காலத்திற்குப் பின்னரே தேசீய வட்டாரத்தில் உதயமாகத் தொடங்குகிறது.

என்ன செய்யலாம்—அவர்களைக் கோபித்துக் கொள்ள முடியுமா அதற்காக — அவர்கள் பண்பு அது—அவர்கள் பெற்றிருக்கும் பயிற்சியும் அந்தப் பண்பை வளர்க்கும் தன்மையதுதான் — பிரிட்டிஷாரை எதிர்த்துப் போராடும் பயிற்சி அவர்கட்கு அளிக்கப்பட்டிருக்கிறதே தவிர பல்வேறு பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து சிந்தித்துச் சீர்தூக்கிச் சுயமாக ஒரு முடிவுக்கு வரும் பகுத்தறிவுப் பயிற்சி அவர்கட்கு இதுவரை தரப்படவில்லை. அவர்களிடத்திலே ஒரு காந்தி இருந்திருக்கிறார், ஒரு நேரு இருந்திருக்கிறார், ஒரு நேதாஜி இருந்திருக்கிறார்—ஆனால் ஒரு அண்ணாதுரை, ஒரு சாக்ரடீஸ், ஒரு பெர்னார்ட்ஷா, ஒரு வால்டேர் இருந்ததில்லை. சிறந்த போர்த் தலைவர்கள் உலவியிருக்கிறார்கள் அவர்கள் கூடாரத்தில். ஆனால் சிந்தனைத் தலைவர்கள் உலவியதில்லை. ஆகவேதான் எந்தப் பிரச்சினையிலேயும் தாமாக ஒரு முடிவுக்கு வரும் சக்தியோ பிறர் அளிக்கும் சிறந்த முடிவுகளை உடனே புரிந்துகொள்ளும் ஆற்றலோ அவர்களுக்கு இல்லை!

---

## பிரிவுக் கடன்

வ. ஆ. மாவட்டம் சக்கரமூதூர் தி. மு. க. தோழரும், இயக்கப் பாடகருமான திருவலம் க. ராமலிங்கம் அவர்களின் முதல் மகள் இசைச் செல்வி. மல்லிகை மூன்று வது வயதில் புரட்டாசித் திங்கள் 18-ம்நாள் இயற்கை எய்தியது. ஷை திங்கள் 18-ம் நாள் ஞாயிறு பகல் 11 மணிக்கு திருந்திய முறைப்படி பிரிவுக் கடனாற்ற நிச்சயித்துள்ளது.

Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras, Joint-Editor M. Ilancheliyan B. A. (Hons.)